1371

M. 1803. AUGUST 192 Vol. No. 1

OF THE REGISTRAR
No.
12 SEP 1927
MADRAS

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:

...தையா & சோ.. ...னை

தீபாவளிப் பண்டிகைக்கு இவைகளில் எது வேண்டும்?

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு, ஜரிகையினால், "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முகதலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரையுள்ள புடவைகளை விரும்பும், ஸ்திரீகளுக்கு, இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேக மில்லை.

No. 1.	16 மு x 44 இஞ்சி	புடவை	1	ரூ.	38	0	0
	18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ.	44	0	0
No. 2.	16 மு x 44 இஞ்சி	,,	1	ரூ.	30	0	0
	18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ.	36	0	0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு மிருதுவாகவும், பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷை கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி	புடவை	1	ரூ.	52	0	0
18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ.	60	0	0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S MUTHIAH & CO

ORT DE

லக்ஷ்மி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
12 SEP 1927
MADRAS

சந்தா விவரங்கள்

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	0	0
தென்னுபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ.	40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ.	50	0	0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)	ரூ.	8	0	0
அரைப்பக்கம் ஷை	ரூ.	4	0	0
கால்பக்கம் ஷை.	ரூ.	2	8	0

சிறந்த வாசனை

ஊதுவத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி சேர்	1-க்கு	6—0—0
அம்பர் வத்தி ,,	1-க்கு	5—0—0
கிலீட் வத்தி ,,	1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி,,	1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,

EXPORT DEP[illegible]MENT,

குழந்தைகளை : : : : நேசியுங்கள்!

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 ,, விலை ரூ. 3—4—0

PERFUME SPRAY.



பன்னீர்
தெளிக்கும் கருவி,

சாதாரணமான எந்த வித பாட்டில்களிலும் வைத்து உபயோகிக்கலாம்.

விலை ரூ. **2—8—0**.

K. S. முத்தையா
கம்பெனி,
ஹைரோட்டு, திருநெல்வேலி.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்திற்குமேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

...ள் பெ...

பச்சை மோதிரத்தின் மர்மம்

இதில் கதா நாயகனுக சுந்தரமூர்த்தியை இயற்கை யாகவே பண ஆசையில் மேம்பட்ட மார்வாடிகளில் பெயர் பெற்ற மார்வாரிமணிசங்கர் அவன் உயிருக்கே ஆபத்து வரும் படியாக, ஒரு நோட்டில் கையெழுத்திட்டு வாங்கி ரூ. 30000 கொடுக்கிறுன். மூன்று வருடங்கழித்து வட்டி ரூ. 20,000-ம் சேர்த்து ரூ. 50,000-க்கு மார்வாடி சுந்தர மூர்த்தியை தொந் திரவு செய்கிறுன். பாலாமணி என்ற 20 வயதுள்ள ஒரு பணக்கார விதவை சுந்தரமூர்த்தியைக் காதலிக்க அவன் இணங்காமையால், பாலாமணி தன் கையில் சில பிடிகளை வைத்துக்கொண்டு சுந்தரமூத்தி கையெழுத்திட்ட நோட்டைப் பெறுகிருள். எவ்வளவோ தன்னுடைய ஆசை வார்த்தைகளா லும் நடிகைகளாலும் சுந்தரமூர்த்தியை வற்புறுத்தியும், அவன் இணங்காமையால் அவனை கெடுக்க பல சூழ்ச்சிகள் செய்வது படிக்க மிக ஆனந்தமாயிருக்கும். ஒரு சங்கத்தாரால் ஏற் படுத்தப்பட்ட பச்சை மோதிரத்தின் மர்மத்தால் இருபெண்கள் கொலை செய்யப்படுவதும், பாலாமணியின் சூழ்ச்சியால் சுந்தர மூர்த்தியின் காதலி கனகசுந்தரிக்கு தன் காதலனைக் கொலை செய்யவேண்டுமென்ற உத்தரவு கிடைப்பதும், அச்சமயத்தில் அவள் படும் அவஸ்தையும் சுந்தரமூர்த்தியின் கையில் எது வாக அகப்பட்ட சில பத்திரங்களால் பாலாமணிக்கு கொலை உத்தரவு அரசாங்கத்தாரால் ஆனதும், பல கஷ்டங்களில் அவஸ்தைப்பட்டு தேறி கடைசியாக காதலர்கள், கனகசுந்தரி, சுந்தரமூர்த்தி ஆகிய இருவர்களுக்கும் நடக்கும் கலியாண மும் படிக்கப்படிக்க மிக இனிமையா யிருக்கும்.

இதன் விலை ரூ: 1—0—0:

லக்ஷ்மி புத்தக சாலை,

சந்தா ஆர்டர் பாரம்

Date....................192 .

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ், மதராஸ்.

ஐயா,

தயை செய்து என்னை / எங்களை நமது லக்ஷ்மிக்குச் சந்தா நேயராக / நேயர்களாகச் சேர்த்துக்கொண்டு, இப்பொழுது நடந்து வரும் மலரின் முதல் இதழி லிருந்து ஸஞ்சிகைகளை அனுப்பிக் கொடுக்கவும். சந்தா ரூபாய் 2/-ம் மணியார்டர் செய்திருக்கிறேன். / 2/-க்கும் V. P. யில் தபால் செலவு உள்பட அனுப்பவும்.

அன்புள்ள,

(கையெழுத்து).

(1)..

....

....

(2)..

....

....

(3)..

....

....

(4)..

....

....

கூடுமானால் நேயர்களின் கையெழுத்து.

....

....

....

குறிப்பு:—பெயர்களை மட்டும் இங்கிலீஷில் எழுதினால் மிகவும் நலமா யிருக்கும். தமிழில் எழுதினாலும் சரியே.

குறிப்பு

லக்ஷ்மிக்குச் சந்தா நேயராகச் சேர விரும்புபவர்கள் முன் பக்கம் தங்கள் பெயர்களை எழுதி, இதைக் கிழித்துத் தனிக் கவரில் வைத்து, நமது ஆபீஸுக்கு அனுப்ப வேண்டும். இது அல்லாமல் நேயர்களின் சொந்த லெட்டர் அல்லது கார்டுகளிலும் எழுதி அனுப்பலாம். நேயர்கள் சந்தாவுக்கு V. P. யில் அனுப்பச் சொல்லுவதை விட பணம் மணியார்டர் செய்தால், எங்களுக்குச் சுலபத்தையும், நேயர்களுக்கு தன லாபத்தையும் கொடுக்கும்.

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்,

சென்னை.

(இந்த இடத்தில் ஆபீஸுக்கு ஏதாவது தெரிவிக்க வேண்டிய திருந்தால் தெரிவிக்கலாம்.)

லக்ஷ்மி துதி

மண்ணினுட் கனிகளிலும்—மலை

வாய்ப்பிலும் வார்கட லாழத்திலும்

புண்ணிய வேழ்வியிலும்—உயர்

புகழிலும், மதியிலும், புதுமையிலும்

பண்ணு நற்பாவையிலும்—நல்ல

பாட்டிலு[illegible]ம் சிறிய படத்தினிலும்

நண்ணிய தேவிதனை—எங்கள்

நாவிலும் மனத்திலும் நாட்டிடுவோம்.

சந்தா நேயர்களுக்கு

ஓர் முக்கிய அறிவிப்பு.

நமது லக்ஷ்மியின் ஐந்தாவ தாண்டு வருகிற ஆகஸ்ட் மாதம் பிறக்கப் போகிறது. இந்த நான்கு வருடங்களாக நமது லக்ஷ்மி தமிழ் நாட்டுக்குத் தன்னா லியன்ற உதவியை எல்லாத் துறைகளிலும் செய்து வந்ததுபோல புதிய வருஷத்திலும், அதிக ஊக்கத் துடன் செய்து வருவாள் என்பதை சந்தா நேயர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். புதிய வரு ஷத்திலிருந்து நமது “லக்ஷ்மி” இன்னும் பல பக்கங் கள் அதிகம் கொண்டதாயும் அழகான சித்திரப் படங் களை உடைத்தாயும் வெளிவருவாள். புதிய வருஷத்தின் சந்தாத் தொகையை நேயர்கள் முன் கூட்டியே ஜுலை 15-ம் தேதிக்குள் அனுப்பிவிடக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். மேல் கண்ட தேதிக்குள், தொகையை அனுப்பாத நேயர்களுக்கு லக்ஷ்மி 12-வது இதழை வி.பியில் அனுப்பி, புதிய வருஷத்தின் சந்தாவைப் பெற்றுக் கொள்வோம். ஐந்தாவ தாண்டில் லக்ஷ்மியை வரவழைக்க இஷ்டப்படாத நேயர்கள் ஜுலை 15-ம் தேதிக்குள் ஒரு கார்டு எழுதி அனுப்பி விட்டால், 12-வது இதழை மட்டும் சாதாரண போஸ்டில் அனுப்பி விட்டு, அத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

அப்படி மேல் கண்ட தேதிக்குள் புதிய வருஷத் தின் சந்தாத் தொகையாவது கார்டாவது அனுப்பாத நேயர்கள், லக்ஷ்மியை வி.பியில் பெற்றுக் கொள்ள லாம் என்ற இஷ்டத்[illegible]டன் [illegible]ருக்கிறார்கள் என்று கருதப்பட்டு, முன் [illegible] 12-வது இதழை வி.பியில் அனுப்புவோ[illegible] அ[illegible]பொழுது சந்தா நேயர்கள், தயவு செய்து, “லக்ஷ்மியை” திருப்பி விடாது, பெற்றுக் கொள்ளும்படி, கேட்டுக் கொள்கிறோம்.

வெளி நாட்டு நண்பர்கள் ஆகஸ்ட்டுமீ 20-ம் தேதிக்குள் ரூ. 2/8ம் மணியார்டரில் அனுப்பிவிட வேண்டியது.

மானேஜர்.

அயம் அல்லது இரும்பு

(பண்டிதர். எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் எழுதியது)

அயத்தின் இயற்கைக் குணம்.

உலோகங்களில் இரும்பே மிகுதியாகக் கிடைப்பதும், மிகுதியாகப் பரவினதும், மிகப் பயன்படுவதுமா யிருக்கின்றது. இரும்பில்லாமல் எந்தக் காரியமும் செய்ய இயலாது. இதனை உலோக அரசன் எனக் கூறலாம். மேற்கு ஆப்பிரிக்காவில் ஈஜிப்தில் இயற்கையான தனி இரும்பு மிக உண்டென்று கண்டிருக்கின்றார்கள். இந்தியாவில் சேலம் ஜில்லாவில் இரும்புச் சுரங்கங்கள் இருக்கின்றன. இந்தியாவில் இன்னும் பல இடங்களில் கருமண்ணிலிருந்தும், கற்களிலிருந்தும் இரும்பு எடுக்கப்படுகின்றன. முள்ளந்தண்டை யுடைய பிராணிகளின் இரத்தத்தில் இரும்பு மிகுதியாகச் சேர்ந்திருக்கின்றது. சில செடிகளிலும் இரும்பு இருக்கின்றது இது பிராணிகளுக்கும், தாவரங்களுக்கும் கெடுதி செய்யாத பிராணவாயுவுடன் கலந்திருக்கின்றது. இது இயற்கைப் பொருளாக இருந்தும் பிராணவாய்வோடு கலந்திருப்பதுமன்றி கெந்தகத்துடனும் கலந்திருக்கின்றது. நிக்கல், கொபலம் என்ற லோகங்களோடும், கல்லோடும், மண்ணோடும் சிறிய அளவான வேறு உலோகங்களோடும் கலந்ததாயிருக்கும் இயற்கையான தனி இரும்பு நிலத்தில் உண்டாவது மிக அரிது. பிளாட்டினம் என்னும் லோகமுள்ள கல்லிலும் சேர்ந்திருக்கிறது.

இரும்பு களிம்பு மணமும், சிறு துவர்ப்பும், புளிப்பும் கலந்த சுவை உடையது. இரும்பில் ஈரக் காற்று பட்டால்

துருப்பிடிக்கும். காந்தம் இரும்பை இழுத்துக்கொள்ளும். கடுக்காய், மாசக்காய் முதலியவைகளின் ஊறல் நீரில் கிழாயங்களில் இரும்பைச் சேர்த்து காய்ச்சுவதால் கருநிற மாகும். இதனுல் துணிகளுக்கு கருப்பு நிறமேற்றுகின்றூர் கள்.

இரும்பு வான்கற்கள்

சில இடங்களில், நல்ல இரும்பு வான்கல்லாக, நிலத் திற் கிடக்கும். இரும்பு வான்கற்கள் நிலத்திலுள்ள மற் றெந்தப் பொருளுக்கும் வேருக இருப்பதால் அவைகளி லிருந்து நிலத்தில் விழுவதை யாரும் காணுதிருந்தும் அவை களை வான்கல் (இரும்பு)கள் என்று நிச்சயிக்கலாம். இவை களில் 30000 இராத்தல் 40000 இராத்தல் நிறையுள்ளதாக ஒவ்வொரு வான் இரும்பு இருப்பதாகவும் தெரிகின்றது. 1844-ஆம் ஆண்டில் தென் அமெரிக்காவில் இரண்டு முழகனம் அளவான ஒரு இரும்பு நெருப்புபோல் விழக் கண்டார்களாம். 635 இராத்தல் எடையுள்ள ஒரு வான் கல் ஏல் கலாசாலையிலும் 252 இராத்தல் எடையுள்ள வான்கல் ஸ்மிக்சன் சங்கத்திலும் உண்டு.

தூய்மையான தனி இரும்பு நீலங்கலந்த வெள்ளை நிறமாயிருக்கும். அதனைத் துலக்கினுல் பளபளப்பாகவும் இருக்கும். தனி இரு பு வாணிபத்தில் காணப்படுவதில்லை. நல்ல இரும்பிலும், கெந்தகம், பாஸ்பரம், கார்பன், சிலிசி இவைகள் கொஞ்சமாவது கலந்திருக்கும்.

இரும்பின் வகையும் இரும்பு...க்கும் வகையும்

இரும்பு மண்ணிலிருந்து, இரும்பைப் பிரித்தெடுப் பதற்கு இரும்பு மண்ணையும், சுக்காங்கல் என்னும் கற் சுண்ணும்பையும், கரியையும் சேர்த்து நெருப்பில் நன்ருய் உருக்குவதால் இரும்பு உருகி தூய்மையாகி, தனியே பிரிந்து விடும். இப்படிச் செய்வதற்கு, இரும்பு எடுக்கும்

இடத்திற்கு அருகில் சுக்கான் கல்லும், நிலக்கரியும் இருக்க வேண்டும்.

இரும்பைச் சிவக்கக் காய்ச்சித் தண்ணீரில் அதிகமுள்ள "ஐட்ரோஜின்" என்னும் நீர்வளியை (ஜலவாயுவை) அதிற் கலக்க விடுவதால், சிறிதும் கலப்பில்லாத நல்ல இருப்பை எடுக்கக்கூடும். இப்பொழுது மூன்று வகையான இரும்புகள் வழங்கி வருகின்றன. சுரங்கங்களில் எடுக்கின்ற இரும்புக் கற்களை உலையிலிட்டு உருக்குவதால் வரும் இரும்பு வார்ப்பு இரும்பென்றும், சீனச்சட்டி என்றும் சொல்லப்படும். இதுமிக நொறுக்கலானதால் தகடாகத் தட்டி மடக்கவும் கம்பியாக இழுக்கவும் இயலாது. வியாபாரத்தில் இரண்டு வகை வார்ப்பு இருப்புகள் வரும். அவைகளில் நரைவார்ப்பு இரும்பைவிட வெள்ளை வார்ப்பு இருப்பு கடினமும், நொறுக்கலுமாய் எளிதில் உருக்ககூடியதும், கரிவாயுவை மிகுதியாக உடையதுமாகும். நரை வார்ப்பிரும்பு ராவவும், துளைக்கவும் கூடியது. வெள்ளை வார்ப்பிரும்பில் அது இயலாது. நரைவார்ப்பு இரும்பு வேண்டிய தளவாடங்கள் வார்ப்பதற்கும், வெள்ளை இரும்பு கம்பிச்சிலாகைகள் தட்டுவதற்கும், எஃகு (உருக்கு)ச் செய்வதற்கும் உபயோகமாகும். வார்ப்பு இரும்பிலேயுள்ள கரிவாயு முதலிய குற்றங்களை நீக்குவதால், தட்டிரும்பு செய்யப்படும். இதைத் தேனிரும்பு என்றும் மருக்கிருப்பு என்றும் சொல்வதுண்டு. இது கடுஞ் சூடாகிய வெண்ணிறச் சூட்டில், ஒன்றோடொன்று ஒட்டவும், விரும்பிய வடிவமாகத் தட்டவும் கூடும். நூறுபங்கு வார்ப்பிரும்பில் 85 பங்கு தட்டிரும்பு எடுக்கலாம். எஃகு அல்லது உருக்கு என்பது இரும்பும், கரி வாயுவும் ஒன்றாகச் சேர்வதால் உண்டாகும் கலவைப் பொருள். எஃகு உருகும் சூட்டைவிட வார்ப்பிரும்பு உருகக் குறைந்த சூடும், தட்டிரும்பு உருக அதிகச் சூடும் வேண்டும். இதைச் சிவக்கக் காய்ச்சி தண்ணீரில் நனைக்க உடனே கெட்டியானதற்கு அடையாள

மான வெள்ளை நிறம் கொள்ளுவது இதன் குணம். இதைத் திரும்பக் காய்ச்சி மெதுவாக ஆறவிட்டால், இரும்பைப் போல் நயமாகும். இப்படி எஃகுவை வேண்டியபடி கடின மாகவும், நயமாகவும் செய்து கொள்ளலாம். எஃகு நன்ருகக் காய்ந்து உருகும் தருணத்தில் நமக்கு வேண்டிய ஆயுதங்களாகச் செய்து உருவாக்கிக் கொண்டு பிறகு கடினமாக்க அவ்வாயுதங்களைச் சிவக்கக் காய்ச்சி தண்ணீரில் நனைப்பார்கள். இப்படி செய்வதற்கு துவைச்சல் என்று சொல்வதுண்டு. இப்படித் தங்கள் ஆயுதங்களுக்கு வேண் டிய வன்மை மென்மைக்குத் தக்கபடி, தீயில் காய்ச்சித் தண்ணீரில் தோய்த்துப் பக்குவப்படுத்திக் கொள்ளுவார் கள். இப்படிச் செய்த ஆயுதங்களில் தோன்றும் நிறங் களினல், வன்மை, மென்மை (கடினம், நயம்) என்பதைத் தெரிந்து கொள்ளுவார்கள். எஃகு உடையக் கூடியது. இதனல் கண்ணுடியையும் கீறலாம்.

சிந்தூரம்செய்ய அயசுத்தி.

அயசுத்தி பலவகைகள் உண்டு. அதில் தமிழ் வைத் தியர்களால் செய்யப்படும் முறை சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுவோம். முன் சொன்ன நயமான தட்டிருப்புத் தகடாவது, பழைய குதிரை லாடத்தை யாவது, எஃகு இரும்பையாவது வேண்டிய அளவு தூளாக அரத்தால் ராவி அதனைத் தண்ணீரில் கழுவி வெயிலில் உலர்த்திக் கொண்டு, பழச் சாற்றிலாவது, காடியிலாவது மூன்று நாள் ஊறவைத்துப் பிசைந்து, நல்ல தண்ணீரில் கழுவி வெயிலிற் காயவைத்துக்கொள்ள சுத்தியாகும்.

இதனைச் சிந்தூரமாகவும், நீருகவும் (பஸ்பமாகவும்) செய்யும் கை முறைகள் பல உண்டு. மருத்துவ நூல் களிற் பல முறைகள் காணலாம். இவைகளில் அனுபவத் திற்கு வந்ததும் எல்லோராலும் எளிதாகவும் விரைவாக வும் செய்யக் கூடிய முறைகளைப் பின்னர் எழுதுவோம்.

210370.

அயம் அல்லது இரும்பு

இரும்பு மருந்துகளும், அதன் செயல்களும்.

இரும்பு அரப்பொடியை ஊறவைத்து, சுத்திசெய்து, சிந்தூரம் அல்லது நீறு (பஸ்பம்) செய்வார்கள். இரும்பிலிருந்து அன்னபேதி முதல் அநேகவித உப்புகளெடுக்கப் படுகின்றன. அயம் சேர்ந்த மருந்துகளைச் சாப்பிடுகிறவர்கள் அறியவேண்டிய விஷயங்கள். குற்ற மற்ற இரும்பாலான மருந்துகளை அருந்தினால் ஒரு கெடுதியும் செய்யாது. அயம் சேர்ந்த மருந்துகள் வயிற்றில் செமித்து (ஜீரணமாகி) இரத்தத்தில் கலந்து அதிலிருக்கும் சிவப்பு அணுக்களை அதிகப்படுத்தி சிவந்த நிறத்தையும் அதிகப் படுத்தும். இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் குறைந்து வெள்ளை அணுக்கள் மிகுதியான காலத்தில் உடல் வெளுப்பும், பலக் குறைவும், பாண்டு, சோகை முதலிய நோய்களும் ஏற்படுகின்றன. ஆதலால், அந் நோயாளர்களின் இரத்தத்தில் இருக்கவேண்டிய அயத்தின் தன்மையுள்ள சிவந்த அணுக்கள் இல்லை என்பதை அறிந்துக்கொள்ளுகின்றோம். அக்காலத்தில் அயம் சேர்ந்த மருந்துக்களை நோயாளிகள் அருந்தி நல்ல நிலை அடைவதைக் காண்கின்றோம். ஆனால், நோயாளிகள் உட்கொள்ளும் இரும்பு முழுவதும் உடம்பில் சேருவதில்லை. அயம் அருந்துபவர்கள் மலம் கரு நிறமாகக் கழிவதால், மலத்துடன் அயம் வெளிப்படுவதைக் காணலாம். சிறு நீர் (மூத்திரத்திலும்), அயம் அருந்துகிற பெண்களின் முலைப் பாலிலும் அயத்தைக் காணலாம்.

அயம் சாப்பிடுகிறவர்களுக்கு சீரண சக்தி, பசி, மிகுதிப்படும். நாடி நடைவிரைவாகும். உடல் வன்மையை உண்டாக்கும். உடலின் வெளி உறுப்புகளில் கண், உதடு முதலியவைகளில் ஏற்பட்டுள்ள, வெள்ளை நிறம் நீங்கி சிவந்த நிறம் உண்டாகும். அயத்தைச் சாப்பிடுங் காலத்தில், பத்துப் பதினைந்து நாளைக் கொருதரம் விட்டு

BL
N.5.1

விட்டுச் சாப்பிடுவது நல்லது. அயத்தை நெடுநாள் விடாமல் சாப்பிட்டால் ஆண்களுக்கு விதையும் (பீஜமும்) பெண்களுக்கு பால் முலேயும் சிறுத்துப் போவதுண்டு. இதனுல் சிலர் இளமையில் அயம் அருந்தக் கூடாதென்பார்கள். அயம் சாப்பிடும்போது நடுவில் மலக் கழிவிற்குச் சாப்பிடுவது நலம். அயத்தைச் சிந்தூரமாகவும், மண்டூரமாகவும், பலவித உப்புகளாகவும், தீ நீர் (திராவகங்க)ளாகவும் செய்து நோய்களுக்குத் தக்கபடி கொடுக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக உடம்பில் இரத்தம், மிகுதியாக உடையவர்களுக்கு அயம் வேண்டியதில்லே. அயமருந்து மிகுதியாய் வயிற்றிலிருந்து கெடுதி விளேந்தால், கடுக்காய் குடிநீர் (கஷாயம்) கலந்த ஆமணக்கெண்ணெய், அல்லது குரோசானி ஓமம் கொடுப்பது நல்லது. ஆகாரம் அருந்திய பின்னர் அய மருந்துகளேச் சாப்பிடவேண்டும். அயம் சாப்பிடும்போது ஊன் (இறைச்சி) வகைகளேயும், மிகப் புளிப்புள்ள பொருள்களேயும், புளிப்பான பழ வகைகளேயும் விலக்குவது நல்லது.

இரத்தத்தில் அயம் வேண்டியவரையில் கலந்த பிறகு, அயத்தை நிறுத்திவிடவேண்டும். அயம் உடம்பில் அளவுக்கு மிகுதியானுல், உடம்பின் நிலேமை தடுமாறி ஜீரண சக்தி குறைந்து உடல் பருமனுகும். அய மருந்துகள் செய்ய கடைகளில் விற்கும் அயப் பொடியை வாங்கக் கூடாது. அதில் உருக்கு இரும்பாகிய தண்டவாளப் பொடியே அதிகம் இருக்கும். சில சமயங்களில் பித்தளேப் பொடியும், மண்ணும் கலந்திருக்கும். ஆதலால் நயமான தட்டிரும்பு, எஃகு இவைகளின் பொடியை காந்தத்திஞல் ஒத்தி எடுத்து தண்ணீரில் நன்ருகக் கழுவிப் பிறகு மருந்துகளுக்கு உபயோகிப்பதே நல்லது. சிலர் தேய்ந்துபோன குதிரை லாடங்களே சிந்தூரங்களுக்கு உபயோகிக்கின்ருர்கள்.

அயம் அல்லது இரும்பு

அன்ன பேதி.

இரும்பு மூன்றுவகையாக பிராண வாயுவோடு கலக்கும். இரும்புத் தூளை கந்தகத் தீ நீரில் போட்டு நெருப்பில் காய்ச்சினல் பொங்கி ஆவி எழும்பும். அவ்விரும்பு முழுவதும் கரைந்து போம். பின்னர் அதில் தண்ணீரைக் கலந்து காய்ச்சி குளிர வைத்தால், பச்சை நிறமும், துவர்ப்புச் சுவையும், இரும்புக் களிம்பு மணமுள்ள உப்புக் கட்டிகளாகும். இதைத் தான் அன்ன பேதி என்று சொல்லுவது. அன்ன பேதி நீரில் கரையும், காற்றுப்பட்டால் பூத்து மேலே வெள்ளை நிறமான தூள் உண்டாகும். இதைத் தீயிலிட்டுச் சுட்டு சிவந்த தூளாக எடுத்து அதை ரோஸ்வடி யென்னும் பெயரால் கடைகளிற் விற்கிறார்கள். இது பொன் நகைகள், பாத்திரங்கள் கண்ணாடிகள் முதலியவைகளை மினு மினுப்பாக்க உபயோகிக்கப்படுகின்றது. அன்ன பேதியை பழச் சாற்றால் அரைத்துப் புடமிட்ட சிவந்த பொடியை (சிந்தூரத்தை) சீத பேதி முதலிய சில வியாதிகட்கும், சூலை, ஆமைக் கட்டி, பெரு வயிறு முதலிய நோய்களுக்கும் கொடுக்க பிணியாளர்கள் குணமடைகின்றார்கள். அக்கி என்னும் ரணம், மேக விரணம் முதலிய ஆறாத விரணங்கள், மூல வியாதிகளில் காணும் இரத்தப் போக்கு இவைகளுக்கு மேல் உபயோகம் மிக நன்மையை உண்டாக்குகின்றது. உடம்பிலிருந்து அதிக இரத்தம் வடிந்தாவது, அல்லது வேறு காரணத்தினலாவது உண்டாகிற பாண்டு ரோகத்திற்கு அன்ன பேதியைக் கொடுக்கலாம். பாண்டு ரோகத்திற்கு, இரத்தத்தில் தேவையான அயம் சேருகிற வரையில் கொடுக்கலாம்.

கடுக்காயை நொறுக்கி தண்ணீரில் போட்டு, அன்ன பேதியையும் கூடச் சேர்த்து காய்ச்சுவதால் கருப்பு மை செய்யப்படுகின்றது. இது எழுதுவதற்கும் துணிகளுக்குக் கருப்புச் சாயத்திற்காகவும் உபயோகிக்கின்றார்கள்.

கோழி வளர்த்தல்

பண்டிதர். எஸ். முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.

அநேக இலாபகாமான தொழில்களில் கோழி வளர்த்தலும் ஒன்று. பிராமணரல்லாதாரில் பல வகுப்பார் கோழி வளர்த்து வருகிறார்கள். ஆனால், தொழில் முறையில் கோழி வளர்ப்பவர்கள் மிகச் சொற்பம்; பாரம்பரைத் தொழில்களை நம்மவர்கள் அரை மனதோடு நடத்தித் தொலைக்கிறார்களேயன்றி புதுத் தொழில்களைக் கைக்கொண்டு பொருள் தேடமுற்படுவதில்லை. திரைகடல் ஓடியும் திரவியம் தேடிய திராவிட மக்களின் சந்ததிகளான நாம் புதுத் தொழில்களில் புகுந்து பொருளீட்ட முயலாது சோம்பேறி வாழ்க்கை நடத்துவது நமது முன்னோர்களை அவமதிப்பதாகும். தென்னாட்டார் விவசாயிகளானதினால் கோழி வளர்த்தல் அவர்களுக்கு மிகப் பொருத்தமான தொழில். ஐரோப்பாவில் டென்மார்க்கும் ஆசியாவில் சீனாவும் கோழி வளர்ப்புக்குப் பேர்போன நாடுகள். இத்தொழிலுக்குப் பெரிய கை முதல் வேண்டாம். இரவும் பகலும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டாம். உடலுழைப்பு இத்தொழிலில் அநேகமாக இல்லையென்றே சொல்லவேண்டும்.

சொற்ப முதலிட்டு சிறிய அளவில் இத்தொழிலைத் தொடங்கி நாளேற ஏற விருத்திக்குக் கொண்டுவர எவ்வளவு எளிய மனிதனுக்கும் சாத்தியமாகும். சிறிய அளவில் தொடங்கி காலக்கிரமத்தில் விருத்தி செய்வது தான் நல்ல முறை. ஏனென்றால் இத்தொழிலில் அநுபவத்தில் அறிய வேண்டிய விஷயங்கள் பல உண்டு. இப்படிச் சொன்னதினால் கோழி வளர்த்தல் கஷ்டமான தொழிலென்று எண்ணி ஒருவரும் மலைத்துவிட வேண்டாம். சொற்ப நாள் பழகினால் எவ்வளவு மந்த புத்தியுடையவனும் திறமை சாலியாக முடியும். ஒவ்வொரு குடும்பத்தாரும்

கோழி வளர்த்தல்

ஐந்தோ பத்தோ கோழிகளை வளர்த்து வந்தால் அவர்களது குடும்பத் தேவைகளையும் பூர்த்தி செய்து சிறிதளவு இலாபமும் பெறக் கூடும்.

இத்தொழிலுக்கு விசாலமான இடம் தேவையில்லை. ஒரு ஏக்கரா பூமியில் 100-முதல் 150-கோழிகள் வரை வளர்க்கலாம். ஆனால் கோழிகளையெல்லாம் ஒரே கூட்டமாய் அடைத்து வளர்க்கக்கூடாது. 100-கோழிகள் வளர்க்கும் ஒருவன் பத்துப் பத்தாகப் பிரித்து வளர்ப்பது நலம். வீட்டைச் சேர்ந்து தோட்டமிருந்தால் 25-கோழிகள் வரை வளர்க்கலாம். இவ்வாறு கோழி வளர்க்கும் குடும்பங்கள் தமிழ் நாட்டில் ஏராள முண்டெனினும் இத்தொழிலை இலாபகரமாகச் செய்யும் வழியை அவர்கள் யோசிப்பதில்லை. உழவன் வித்து வகைகளைத் தேர்ந்தெடுப்பது போல் கோழிகளிலும் நல்ல ஜாதிக் கோழிகளைத் தேர்ந்தெடுத்து வளர்க்க வேண்டும். நாட்டுக் கோழிகளை விட வெளி நாட்டுக் கோழிகளை வளர்ப்பது மிக இலாபகரமானது. ஏனென்றால் வெளி நாட்டுக்கோழிகள் அதிகம் முட்டைபோடும்; முட்டையும் பருமனாயிருக்கும்.

கோழி வளர்ப்புத் தொழிலில் வருமானம் விரைவாகவும் ஜாஸ்தியாகவும் கிடைக்கும். கோழிக் குஞ்சுகள் ஒரு வருஷத்துக்குள் வளர்ந்து முட்டையிடத் தொடங்குவதே அதற்குக் காரணம். வேறு பிராணிகளை வளர்த்து இவ்வளவு விரைவாக இலாபம் பெற முடியாது. சொற்பத் தொகை முதலிட்டு சொற்ப காலத்தில் பெரிய இலாபம் எடுக்கும் தொழில் கோழி வளர்ப்பு ஒன்றேயாகும்.

இந்தத் தொழிலை புருஷர்களும் பெண்களும் சிறுவர்களும் நடத்தலாம். தேகப் பிரயாசையே இத்தொழிலுக்குத் தேவையில்லை. கொஞ்சம் கருத்தும் கண்காணிப்பும் மட்டும் போதுமானது. வயோதிகர்களுக்கும் பெண்களுக்கும் இதைப்போல பொருத்தமான தொழில் வேறில்லை. விக்டோரியா மகாராணியார் கூட கோழி வளர்ப்புத் தொழில் மிகப் பிரியமுடையார்களாயிருந்தார்களாம். வீண் காலம் போக்கும் நம்பெண்கள் இத்தொழிலில் ஈடுபட்டால் பொழுதும் ஆநந்தமாகப் போகும்; குடும்பத்துக்கும் இலாபமுண்டாகும். நாட்டிலும் செல்வம் வளரும்.

கோழிகளில் பலவகை யுண்டு. சில கோழிகள் வருஷ மொன்றுக்கு 200-முட்டை வரை இடும். சில கோழிகள் தனித் தனி 8-முதல் 12-ராத்தல் வரை மாமிசம் கொடுக்கும். அதிக முட்டையிடும் கோழிகளையும் அதிக மாமிசம் கொடுக்கும் கோழிகளையும் தேர்ந்தெடுத்து வளர்ப்பது தான் இந்தத் தொழிலில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம்.

முட்டை மிகவும் விசேஷமான உணவுப் பொருள். மேல் நாட்டார் உணவில் முட்டை முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது. முட்டையின் போஷணக் குணத்தினால் பிராமணர்களும் சைவர்களும் கூட மருந்தின் பேர் சொல்லி உண்ணத் தொடங்கி விட்டார்கள்.

நம் நாட்டில் கிராமவாசிகளின் குழந்தைகள் பெரும் பாலும் எலும்புக் கூடுகளாகவே இருக்கிறார்கள். கிராம வாசிகளான குடும்பத்தார் ஒவ்வொருவரும் கோழி வளர்க்கத் தொடங்கி தம் மக்களுக்கு ஒவ்வொரு முட்டை வீதம் கொடுத்து வந்தால் கிராமச் சிறுவர்கள் மிகக் கொழுப்பாக வளர்வார்கள். நோயாளிகளுக்கு முட்டையும் கோழி சூப்பும் உத்தமமான உணவாகும். பட்டணங்களில் வசிப்பவர்களுக்கு ஆட்டிறைச்சி மீன் முதலிய கொழுப்புள்ள உணவுப் பண்டங்கள் பிரதி தினமும் கிடைக்கும். கிராம வாசிகளுக்கு அந்த சௌகரிய மில்லை. கோழி ஒன்றுதான் அவர்களுக்கு ஏற்ற கொழுப்புள்ள உணவுப்பொருள். கிராம வாசிகள் கோழி வளர்த்தலில் ஈடுபட்டால் அவர்களுடைய தேவை பூர்த்தியாவது மல்லாமல் பட்டணங்களுக்கும் ஏராளமாக முட்டையும் கோழியும் அனுப்பி மிகுந்த இலாபம் பெறலாம்.

கோழிக்குத் தீனிச் செலவில்லை. ஒவ்வொரு வீட்டிலும் வீணை களையும் பொருள்கள் கோழிகளுக்கு ஏற்ற தீனியாகும். நாம் சாதாரணமாகத் தினந்தோறும் களைந்து வரும் அரிசி, குறுநொய், தவிடு, காய்கறி பதார்த்தங்கள், எச்சில்கள் இவைகளைக் கொண்டு, விசேஷ சிரமமும் செலவுமில்லாமலே 5-அல்லது 10-கோழிகளை வளர்க்கலாம்.

கோழிக் காஷ்டம் விசேஷமான உரம். சாணத்தை விட மேலானது. அவரை, புடலை முதலிய பயிர்களுக்கு மிகவும் உத்தமமான உரம்.

கோழி வளர்த்தல்

சீமைக் கோழிகளுக்கு விலை ஜாஸ்தியானதினால் கிராம வாசிகள் வாங்கி வளர்ப்பதில்லை. சீமைச் சேவலையும் நாட்டுக் கோழிகளையும் இணை சேர்த்தால் நல்ல கோழிகள் உற்பத்தியாகும்.

மிகச் சுளுவானதும் அதிக இலாபம் தரத்தக்கதுமான இந்தத் தொழிலை யாவரும் பின் பற்றுவார்களானால் நம்மவர்கள் சுக சரீரிகளாகவும் செல்வர்களாகவும் வாழ இடமுண்டாகும்.

பசிபிக் சமுத்திரத்திலுள்ள பலசாகோ தீவில் 4 அடி நீளமுள்ள பல்லிகள் இருக்கின்றனவாம். இவை ஒரு மனிதனுடைய காலை அப்படியே கடித்து துண்டித்து விடுமாம்.

ஐந்து வயதில் தானாக நினைக்கும் சக்திபெற்ற ஒருவன் 30 வயதில் 1,920000,00, எண்ணங்கள் எண்ணியிருப்பானாம். மூளை வேலையே செய்பவர்கள் இதைவிட இரண்டத்தனை எண்ணங்கள் எண்ணி யிருப்பார்களாம்.

அமெரிக்காவில் மனிதர் செல்ல முடியாத சதுப்பு நிலங்களில் ஆகாய விமானத்திலிருந்து தானியங்களை விதைக்கும் முறையைக் கையாளத் தொடங்கியிருக்கிறார்களாம். இதனால் அவ்விடங்களில் வாத்துகள் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

முகஸ்துதியில் பிரியமுள்ள ஒரு செல்வனுக்குப் பிச்சைக்காரன் ஒரு எழுதிய கடிதமாவது:—ஐயா தயவு செய்து எனக்கு 10 ரூபா கடன் கொடுங்கள். பின்னர் எளியேன் ஒருவன் இருந்தேன் என்பதையே மறந்துவிடுங்கள். தங்களால் நினைவு கூறத் தகாத அற்பன் நான்.

கான்ஸ்டாண்டி நோபிளில் 'அக்ஷம்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் ஸதீக்பே என்பார் பெண்மணியை அவமதித்ததற்காக ஐந்து மாதம் சிறையி லிடப்பட்டாராம். துருக்கிப் பெண்கள் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல் பூரண உரிமை பெறத் தகுதியற்றவர்கள் என்று எழுதியது அவருடைய குற்றங்களில் ஒன்று!

பிரான்ச் தேசத்தைச் சேர்ந்த காலிசோ என்பவர் சென்ற சில மாதங்களுக்கு முன்பு ஓர் ஆகாயவிமானத்திலே ஏறி பூமிக்கு மேல் 39,580 அடிகள் சென்றார். அங்கு சிதோஷ்ண நிலை அளவு 68 டிகிரிகளாக யிருப்பதை அவர் கண்டார்.

அறிவின் பயன்.

(ஸ்ரீமான் B. S. குமாரஸ்வாமிப் பிள்ளை எழுதியது)

1. ஜீவவர்க்கங்களையும் தாவரவர்க்கங்களையும் பற்றி சாஸ்திர நிபுணர்கள் அவரவர்கள் விவேகத்திற்கும் ஆராய்ச்சி அறிவிற்கும் தகுந்தபடி கண்டறிந்த கோட்பாடுகள் சாஸ்திர விதிகள் பலவற்றிலும் வாலேஸ், டார்வின் இவர்கள் பிரசுரஞ் செய்திருக்கும் கொள்கைகளே பெரும்பாலும் தலை சிறந்து விளங்குகின்றன. மனிதன் உட்பட சகல உயிர்ப்பிராணிகளின் சரீர அமைப்பையும் அங்க இயல்புகளையும் வெகு நுட்பமாய் பரிசோதனை செய்து பார்த்ததில், ஒவ்வொன்றும் உயிரோடிருந்து விருத்தியடைவதற்கு நடத்திய மல்யுத்தத்தினாலும், ஆஹாரந் தேடுவதால் தன்னை எதிர்த்த பிராணிகளைத் தாக்கியதினாலும் அங்கங்களும் நரம்புகளும் எலும்புக்கூடும் மாறுபட்டு வெகுகாலமாய்ச் சீர்திருத்தமடைந்து இப்பொழுது இந்நிலைமையில் வந்திருப்பதாக தக்க சான்றோடு ரூபித்திருக்கிறார்கள். உயிர் நூல் வல்லுநரான புரோபஸர் ஹக்ஸிலி (Professor Huxley) என்பவர் டார்வின் கொள்கைகளை விளக்கி வெளியிட்டிருக்கும் நூல்களை மிகுந்த பொறுமையுடன் வாசித்தறியும் அறிவாளர்கள் மிகுதியும் பயன் எய்துவார்கள். இக்காலத்து, டார்வின் கொள்கைகளில் பாண்டித்யமுடைய மெச்சினிக்காப் (Metchuikoff) என்பவரை அநேகர் கேள்வியுற்றிருக்கலாம்.

2. உயிர்நூல் வல்லுநரான மெச்சினிக்காப் செய்திருக்கும் நூதன ஆராய்ச்சியின் பலன்களை சுருக்கிக் கூறுவோம். நமது இரத்தத்தில் இரண்டுவிதச் சிறு முட்டைகள் காணப்படுகின்றன. மிகத் தெளிவான நீரில் வெண்மையான சிறு முட்டைகளும் சிவப்பான சிறு முட்டைகளும் ஆயிரக்கணக்காக மிதந்து செல்வத்தை பூதக்கண்ணாடியின் உதவியால் நாம் கண்டறிக்கூடும். இவைகளில் வெண் முட்டைகளுக்கு சாஸ்திரியார் பாகோஸைட்ஸ் (Phagocytes) என்று பெயரிட்டிருக்கிறார். பாகோஸைட்ஸ் என்ன செய்கின்றன?

அவைகளே மனிதரின் வியாதியை நீக்குகின்றன. அவ்வைகள் இரத்தத்தில் நஞ்சு கலவாமலும் வேண்டாத வஸ்துக்கள் கலந்து தோஷம் செய்யாமலும் பாதுகாத்துக் கொள்கின்றன. சரீரத்தினுட் செல்லும் அழுக்குகளையும் விஷப் பொருள்களையும், நோய்க் கிருமிகளையும் எடுத்துவிடுகின்றன. எப்பக்கத்திலேனும் காயம்பட்டால் இவ்வெண் முட்டைக் கிருமிகள் ஆயிரக் கணக்காய் இமைப்பொழுதில் அவ்விடத்திற்கேகி அப்பாகத்திற்குப் புத்துயிரளித்து புறப் பொருள்களை எரித்துவிடுகின்றன. ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு நிமிஷநேரத்திலும் மனிதனைத் தாக்குகின்ற கிருமிகள் அனைத்தையும் உடனுக்குடன் எதிர்த்து அவைகளைப் பஸ்மீகரப்படுத்திவிடுகின்றன. நோய் நொடிகளாலும் காயங்களினாலும் வாட்டம் அடையும்பொழுது சரீரத்தினுள் சேனைகளுடன் சேனை தாக்குவதுபோல பாகோஸைட் கிருமிகளுக்கும் வியாதிக் கிருமிகட்கும் நடக்கின்ற ஜீவிதப் போர் மிகவும் வியக்கத்தக்கது ; நுட்பமான கருவிகளினால் இன்னும் அறியத்தக்கது. பாகோஸைட் சேனை வெற்றி பெறின் நோயாளி பிழைத்தெழுந்திடுவான் ; அவைகள் தோல்வியுற்றால் நோயுற்றவன் உயிர் துறப்பான். இதுவே மேற்கூறிய சாஸ்திரியாருடைய முதற்கொள்கையாகும்.

3. இப்பொழுதும் மேற்கூறிய மெச்சினிக்காப் அவர்கள் பாரீஸ் நகரத்தில் அனேக நூதன இயந்திரங்கள் கருவிகள், பூதக்கண்ணாடிகள் அமைத்த ஆராய்ச்சி மண்டபத்தில் (Laboratory) அனேகம் புதிய செய்திகள் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார். மனிதரின் ஆயுள் நிலையை எவ்வளவு நாள் நீடித்துக்கொண்டு போகலாமென்றும் மனிதனின் உயிரைக் கவர்கின்ற பொருள்கள் எவை, அவ்வைகளை மாய்ப்பதெவ்வாறு என்றும் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார். மனிதன் நீடித்தவாழ்வுக்கு அமிதமான பொருட் செலவும் விசேட முயற்சியும் அவசியமில்லை. இல்லற வாழ்க்கையை ஒழுங்காக நடத்தினால் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்தி ஆடவரும் மகளிரும் 80 முதல் 100 வயதளவும் ஆரோக்கியத்துடன் வாழலாமென அவர் கூறுகின்றார். முதுமைப்பருவம் அடையாதிருக்க நாமென்ன செய்வது? நமது தசைகள், நரம்புகள் இரத்த ஓட்டக்கருவிகள், அகப்புற அவயவங்கள் தளர்ச்சியடையாமல் என்றும் இளமையா

யிருக்க நாம் பின்பற்றவேண்டும் மார்க்கமென்ன? இவைகளை ஆராய்ச்சி செய்யுமுன், மனிதருக்கு என்றும் துன்ப மிழைப்பதான மூன்று காரியங்களைக் கவனிப்போம்—

(i) நமது வாலிப காலங்களில் நமது அறிவின்மையாலோ அனுபவக் குறைவினாலோ சில வியாதிகள் நம்மைத் தொத்திப் பிடித்து இரத்தக் குழாய்களின் சக்தியைக் குறைத்துவிடுகின்றன.

(ii) மது முதலிய லாகிரி பதார்த்தங்கள் எப்பொழுதும் சரீரத்திற்கு தீமையே விளைவிக்கின்றன. குடிகாரரைப் போலல்லாது உற்சாகத்தின் பொருட்டுக் கொஞ்சங் குடித்தாலும் அது தற்கொலைபுரிவதேயாகும்; அச் செய்கை நோய்க்கு விருந்து; ஆயுளுக்குக்கேடு; அங்க இயல்புகளுக்குப் பங்கம்; சமுதாயத்திற்கும் தனக்கும் ஆற்றொணாக் கொடு நோய்.

(iii) அமித உணவும் சரீர வளர்ச்சிக்கு அவசியமில்லாத மற்றும் இன்சுவைப் பண்டங்களும் வேண்டாதவைகளே. இவை உடலோடு சேராது அழுக்குப் பொருள்களை உண்டுபண்ணி பாகோஸைட் கிருமிகளின் சக்தியைக் கெடுத்துவிடுகின்றன.

4. நமது அறிவினாலும் அனுபவத்தினாலும் மேற்கூறிய மூன்று குற்றங்களையும் விலக்கி, நாம் வசிக்கும் அறைகளில் பொடி, புழுதி, முதலியன தங்காதபடியும் பொடிக் கிருமிகள் புழுக்கள் தங்குவதற்கு இடமில்லாமலும் வீடுகள் அமைக்கவேண்டும். சூரிய வெளிச்சமும் காற்றோட்டமும் ஏராளமாய் பரவுந் தன்மையதாகவு மிருக்கவேண்டும். நாம் அணியும் ஆடைகள் பரிசுத்தமானதாய் ஆரோக்கியத்திற்கு இடையூறு தாராதனவாய் இருப்பதுடன் நாம் உட்கொள்கின்ற உணவுகள் சுகாதார முறையில் தயாரித்ததாய் இருக்கவும் வேண்டும். நாம் உயிரோடிருக்க உண்பதன்றி உண்பதற்காக உயிர்த்திருக்கவில்லை என்ற பழமொழியை நன்குணர்தல் வேண்டும். ஏராளமாய்ப் புளித்த தயிர், மோர், இவைகளை பிரதி தினமும் அருந்திக்கொண் டிருந்தால் அம்மோரினிடத்துக் காணப்படும் கிருமிகள் பாகோஸைட் கிருமிகளுக்கு ஊக்கத்தையளித்து அவை விருத்தியடைய உதவிபுரியும். அப்பொழுது உறுப்புகள் தளர்ச்சி,

மூப்பு எய்தாவண்ணம் பாகோஸைட் கிருமிகள் பாது காத்துக்கொள்ளுமாம்.

5. இனி அவர் சோதனை நடத்திக் கண்டறிந்த சில ஜீவ ஜெந்துக்களைப்பற்றிக் கூறுகின்றார் :—

சூரிய வெப்பம் மிகுந்த பாகங்களில் வௌவால் இனங்கள் ஏராளமாயுண்டு. அவைகள் கனிவர்க்கங்களையே தின்பதால் அவைகளின் குடல்களில் அஜீரணமாகாத பதார்த்தங்களும் நோய்க் கிருமிகளும் மிகவும் அபூர்வமாய்த்தான் காணப்படுகின்றன. ஆனால் பல மனிதரின் குடல்களை பரிசோதித்துப் பார்த்ததில் நோய்களை எளிதில் உண்டு பண்ணக்கூடியதும் அழுகித் துர்க்கந்தம் வீசுவதும் சரீர அமைப்பைக் குழப்பஞ்செய்யக் கூடியதுமான 3 விதக் கிருமிகள் ஆயிரக்கணக்காய்க் காணப்பட்டனவாம். இக் கிருமிகள் நிமிஷத்திற்கு நிமிஷம் ஒன்றிலிருந்து இலட்சக் கணக்காய்ப் பெருகிவிடுமாம். அவைகள் பெருகாதபடி பாகோசைட் கிருமிகள் அவைகளோடு ஓயாது போர்புரிகின்றனவாம்.

(6) முடிவாக மனித வாழ்க்கையைப்பற்றி அவர் கூறுவதாவது :—அகமும் புறமும் சுத்தமாயிருக்கும்படி சுகாதார முறைகளை நன்றாய்க் கவனிப்பார்களுக்கு 100 வயதளவு ஆரோக்கியத்துடன் ஜீவித்திருக்க முடியும். உடலுக்குப் போஷணை யளியாத பொருள்களை உண்டு வயிறு நிரப்புவதில் ஒரு பயனுமில்லை. வெளி நாடுகளிலிருந்து டப்பாவில் அடைத்துவரும் தின்பண்டங்கள் தீமை விளைப்பனவாகும். நமது நோய்கள் நமது சந்ததிகளையும் பாதிக்குமாதலின் நோயற்ற வாழ்வுவாழ நாம் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். இக்கடமைகளை நன்குணர்ந்து ஒழுகும் ஆடவரும் பெண்டிரும் 100 வயதளவும் சுகமாய் வாழ்ந்திருந்து மனத்திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் இப்பிரபஞ்ச வாழ்க்கையைவிட்டு நீங்குவர் ; அவர்கள் மரணத்துக்குப் பயப்படார் ; ஏங்கி ஏங்கி இறக்கார். தம்மைச் சூழ்ந்திருக்கும் சுற்றத்தாரை ஆசீர்வதித்து மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் செல்வர்.

திருநீலகண்ட நாயனார் சரிதை.

வண்ணைநகர் ஸ்ரீ. க. வைத்தியலிங்கம் பிள்ளை எழுதியது.

கலிவெண்பா.

சிற்றம் பலவர் சிதம்பரத்தி லேகுயவர்
சுற்றும் குலம்விளங்கத் தோன்றினார்—கற்றைசெறி

செஞ்சடையார் பாதமலர் சென்னிதனிற் சூடியே
வஞ்சமிலா தென்றும் வழிபடுவார்—நஞ்சனைய

பொய்கொலை கள்ளுண்ணல் புலைமுதலாந் தீத்தொழில்கள்
செய்யாதில் வாழ்க்கைதனிற் சென்றிடுவார்— வையகத்தில்

தூயசிவ பக்தருக்குத் தொண்டுசெய்த லேயெடுத்த
காயமதிற் கண்டபல னென்றவர்க்கு—நேயமுடன்

எப்பொருளைக் கேட்டாலு மீந்திடுவார் மட்கலஞ்செய்
தொப்புடனே தங்குடும்ப மோம்புவார்--இப்புவியில்

அவர்பாரி யாரும் அருந்ததியின் மிக்கார்
புவனங்க ளுய்யவரன் பொல்லாப்—பவமனைய

ஆலமுண்டு நீலகண்டமாயினா ரென்றுருகிச்
சாலவன்போ டெப்பொழுதுஞ் சாற்றுவார்—பாலரைப்போல்

நித்த முரைப்பதினால் நீலகண்ட ரென்னும்பேர்
வைத்தழைத்து வந்தார் மகிதலத்தோர்—எத்திசையும்

நல்லா ரெனவாழ்ந்து நண்ணுநா ளோர்தினத்திற்
பொல்லாக் கணிகைதனைப் புல்லியவ—ரில்வில்வரக்

கோகிலமார் தேவி குறிப்பா லுணர்ந்தூட
மோகமொடு சேருதற்கு முன்னுதலும்—வேகமனந்

தீண்டாதீ ரெம்மைத் திருநீல கண்டமென்று
பூண்டாங்கு மாது புகன்றிடலும்— ஆண்டகையார்

பன்னியெமைத் தீண்டாதீ ரென்றுபன்மை வார்த்தையினாற்
பன்னியதா லன்றுதொட்டுப் பாரிலுள்ள—கன்னியர்க

ளேவரையும் நான்விரும்பே னென்று நியதி பண்ணிப்
பாவை யொடுங்கலவி பண்ணமல்—தாவிலுயர்

திருநீலகண்ட நாயனார் சரிதை

ஓடுவனைந் தன்பர் குதவிப் பலகாலம்
மாடுபல செல்வமெய்தி வாழுகையிற் —றேடரிய
வாலிபமுங் கெட்டு வயசுசென்று தையலுடன்
ஏலாக் கிழப்பருவ மெய்தியபின் —நீலகண்டர்
காந்தையொடு சத்தியத்தைக் காத்துவரு நற்றவத்தை
மாந்தருக்குக் காட்ட மதிமுடியார்—ஏய்ந்ததிரு
மேனியெங்கும் பூதி விளங்கத் தமதரையி
லீனமிலா வெண்கோ வணமிலங்க —ஊனமிலாத்
தங்கரத்தி லோடொன்று தாங்கினராய் வேட்கோவர்
பொங்குமனை யிற்போந்து புக்கினார்— தங்குசிவ
யோகியரைக் கண்டுதொழு துங்கட்கு யானுஞற்றுஞ்
சோகமிலாத் தொண்டுளதோ சொல்லுமென —வூகையோடு
கெட்டுப்போ காமலிந்த ஓட்டைவைத்துக் கேட்கும்போ
தட்டிசொல்லா தத்தை யளித்தியென்று—பெட்புறுமிவ்
வோட்டின் பெருமை யுரைக்கமுடி யாததனிற்
போட்டபொருள் யாவும் புனிதமுறும் --நாட்டுமிது
கைத்தலத்தி லுள்ளளவு மெவ்வுணவுங் கைகூடும்
இத்தகைய வோடதனை யீந்திடுவாய்— வைத்திருந்து
என்று புகல விசைந்துகுலா லர்க்கிறைவர்
சென்றதனை வாங்கியில்லிற் சேமித்து —நின்றவரைப்
போற்றி விடைகொடுக்கப் புங்கவர்சின் னாட்கழித்து
ஏற்றுவைத்த வோடங்கே யில்லாமன்—மாற்றியபின்
சங்கரனார் வீட்டில்வந்து தாசனே நானளித்த
எங்குமிலா வோடதனை யீதியென—அங்குசென்று
அன்பரும்போய்ப் பார்த்ததனை யவ்விடத்திற் காணாமல்
துன்பமெய்தி வந்துநின்று சொல்லுவார்— மின்புரையுஞ்
சாதுவே யோடுவைத்த தானமதிற் காணவில்லை
யாதுசெய்வேன் வேறோ டளிக்கின்றேன்—பேதமின்றி
ஏற்பீ ரெனவிறைஞ்ச எம்பெருமா னன்பர்தமைச்
சீற்றமுற்றார் போலச் சிரிப்பின்றி—மாற்றுயர்ந்த
பொன்னோட்டைத் தந்திடினும் வேண்டேன் புனிதமிக்க
என்னோடே நல்குதியா லென்றுரைத்தா—ரன்னபொழு
தீட்டு நிதியிழந்த ஏழைபோ லேங்கிமனம்
வாட்டமுற்றுத் தொண்டர் வருந்துதலுங்—கோட்டுவரை

வில்லா ரடைக்கலமாய் வைத்த வியன்பொருளை
இல்லை யெனக்கவரு மெத்தனே — நில்லென்று
பொல்லா வசைகள் புகல வுளம்வருந்தி
நல்லானு மப்பொருளை நாளெனிடத்தே — னல்லனென
ஏகனதை நீகவர வில்லையெனி னுன்மகனை
ஓகையொடு பற்றி யுயர்குளத்தில் — சோகமின்றி
மூழ்குவா யென்று மொழிய எனக்குமகன்
பாழ்வினையா வில்லையெனப் பன்னுதலும் — வீழுமுன்றன்
தையல்கரம் பற்றித் தனிவாவி யிற்படிந்து
மெய்யை விளக்கி விடுதியென — மையலிலார்
முன்னர்செய்த சத்தியத்தாற் றீண்ட முடியவில்லைப்
பின்னமின்றி யான்மூழ்கிப் பெட்புறவே — நன்னயமாய்க்
காட்டுவே னுண்மையெனக் காலனைக்காய்ந் தார்முனிந்து
தீட்டரிய தில்லைவா ழந்தணர்முன் — கூட்டிப்போய்த்
தன்வழக்கைக் கூற வவர்சாற் றியபடியே
துன்னு முயர்மறையோர் சொல்லுதலும் — அன்னவரும்
அட்டியொன்றும் பேசா தருமனையா ளைக்கொடுபோய்
உட்டுளைசேர் மூங்கிற்றண் டொன்றெடுத்துத் - திட்டமுடன்
இருதலையும் பற்றி யெழிற்கயத்தின் மூழ்கக்
கரியுரித்தார் காரிகைகைதீண்டி — விரிகுளத்தின்
மூழ்குதியா வென்னமுன்னே தங்களுக்குள் ளேமூண்ட
காழ்சபதம் யாவுங் கழறியே — மூழ்கிக்
கரையின்மே லேறுங் கணவனுமில் லாளுந்
திரைபெறுமூப் புப்பருவந்தீர்ந்து — உரமிகுந்த
வாலிபகோ லம்படைத்து மாமுனிவ ரேத்தநின்றார்
மாலறியார் சத்தியுடன் மாவிசும்பிற் - பால்விடைமேற்
றோற்றுவதை நோக்கித் துணைவிழிகண் ணீருகுப்ப
ஆற்றாது சிந்தை யவசமுறப் — போற்றிசெய்து
நிற்பாரைப் பார்த்து நிருமலனு மைப்புலனை
வெற்றிகொண்ட நீவிரெம்பான் மேவியே — அற்புமிகுந்
தென்று முமது இளமைநீங் காதிருமி
னென்று கரந்தா ரிருவோரும் — மன்றினடஞ்
செய்வோர் தமது சிவலோகந் தன்னையெய்தி
மெய்யான பேரின்பமேவினரா — லுய்வடைய
ஆருமறி யாமலரா ளுணைதனைக் காத்தவர்கள்
சீர்பரவி வாழ்வோஞ் சிறந்து.

உருத்திர சூக்தம்.

இருக்குவேதம் மண்டலம், எ. சூக்தம், சசு.

த. ராமகிருஷ்ண விச்வகர்மன்.

(வேதமாணுக்கன்)

[இருக்கு வேதத்தில் உருத்திரனைக் குறித்துக் கூறப் படும் சூக்தங்கள் நான்கு. இது நான்காவது சூக்தம்; நான்கு மந்திரங்கள் கொண்டது. இந் நான்கு மந்திரங்களின் நேரான தமிழும் கருத்தும் பொருள் விளக்கமும் குறிப்புக் களும் ஆங்கில மொழிபெயர்ப்பும் கீழ்தரப்படுகின்றன. ஆங்கில மொழிபெயர்ப்போடு இவ்வுரையினையும் மூலத் தோடு ஒப்பநோக்கி ஆராய்க.]

தமிழ்.

க. உறுதியான வில்லைத் தாங்கித் விரைவாக அம்பு கள் ஏவுகின்றவனும், மாற்றாது செருக்கடக்கும் ஆற்ற லுடையானும், தனக்கு நிகரான பகைவனில்லாதவனும், கூர்மை மிக்க படைக்கலன்க ளேந்தியவனும், வீரனும், சுதந்திரனும், சான்றோனும் பிறரிடுக்கண் ஒழிப்பவனு மாகிய தேவன் பொருட்டு இம் மொழிகள் கழறுகின்றோம். அன்னான் நம் மாற்றங்கட்குச் செவி சாய்த்திடுக.

உ. யாதெனின், நிலத்திலும் வானிலும் பிறக்கின்ற உயிர்கள் உறைகின்ற பேரரசுகளில் அவ்வீரன் ஒளி யெய்து கின்றான். பிறர் துயர் தவிர்க்கும் அவ்வீரற்கு; தற்காக்குங் குடிகளைக் காத்திடலானும் பிணிகளகற்றிடலானும் நம் இல்லங்களில் முகமன் வழங்கிடுக.

ங. பரவெளியி னின்றெழும் நினது ஒளிமயமான மின்சாரம் நிலத்து உலவுகின்றது. அஃதெம்மி னின்றகன்று நிலவுக. சீரிய அறிஞ! நின்பால் ஆயிரம்வகை மருந்துக ளுள. அவற்றான் எங்கட்கும் குழவிகட்கும் கேடு சூழற்க.

ச. இடுக்கண் களைபவ! எம்மை அழிக்கற்க. எம்மை அகற்றற்க. நினது சினத்திற் கிலக்காக யாங்களுறையோம். உயிர்கட் குயர்ச்சிதரும் யக்ஞ மென்னும் நற்செயல்களில் யாங்கள் பங்கு பெறுக. நினது சீரிய ஒழுக்கத்தால் எம்மை யெஞ்ஞான்றும் காத்திடுக.

கருத்தும் பொருள் விளக்கமும்.

'உருத்திரன்' துயர் நீக்குபவன் என்னும் பொருள் பயப்பது. வீரர் வீரச் செயல்களால் மக்களின் துன்ப மொழிக்கின்றனர்; மருத்துவர் மருத்துவ முறைகளால் மக்களின் இடுக்கண் நீக்குகின்றனர். இப்பொருட்டானே இவ்விருவர் திறமையும் உருத்திர சூக்தத்து நவிலப்படுகின்றது. யாதெனின், வீரர் மருத்துவர்களின் உள்ளத்துப் பிறர் துன்பம் நீக்குதல் வேண்டுமென்ற சிந்தனை ஒத்திருத்தலாலாகும். வேத சூக்தங்களில் பண்பொப்புமையே சிறப்பாகக் கொள்ளப்படுகின்றது. துயர் நீக்கும் நீர்மை இருவர் பாலு மொப்பக் காண்டலான் உருத்திரத் தன்மை கருதி இருவரியல்புகளையும் உருத்திர சூக்தத்து அறிவுறுத்தப்படுகின்றன. துயர் களைதலே உருத்திரத் தன்மையாகும். உருத்திரத்துவம் அல்லது துன்ப நீக்கப் பண்பு வீரர் பாலுண்டு; மருத்துவர் பாலுண்டு. இத்தகைய, இடர்களையும் பண்புடைய உருத்திர தேவதையே இச் சூக்தத்து வருணிக்கப்படுகின்றது. இதன்கண் மிகத் திறம் பட வீரர்களின் நாட்டாண்மைப் பேராசும்; மருத்துவர்களின் வனஸ்பதிய - மருந்தாண்மைப் பேராசும் புனைந்துரைக்கப்படுகின்றன. இவற்றானே வீரர்க்கு வீரனும் மருத்துவர்க்கு மருத்துவனுமாக இரண்டும் பரந்து நின்று உயிர்களின் துன்பம் துடைத்தாளுகின்ற இறைவனையும் உணர்த்தப்படும். இதன் செய்யுணடை ஜகதி, திரிஷ்டுப் என்பன. இருடி வசிட்டர். இதன் நான்கு செய்யுட்களிலும் முறையே புகழ்தற்கரு மாவீரனதியல்பும், வீரனும் மருத்துவனும், மின்தாதும் மருந்துப் பொருளும், சினமொழித்தலே யாவர்க்குஞ் சிறப்பென்பதும் விளக்கப்படுகின்றன.

புகழ்தற்கரிய மாபெரும் வீரன்.

க. வீரனுவான் வன்மை மிக்க வில் தாங்கியும், சீரிய அப்புகளை நன்முறையில் ஏவுகின்றவனாகவும், கூரிய படைக்கலன்க ளுடையவனாகவும், பகைவரது தாக்குதல்களைத் தாங்கும் வலிமையுடையவனாகவும், மாற்றார் புறமுதுகிடத் தாக்கும் ஆற்றலுடையவனாகவும் எஞ்ஞான்றும் பெரும் வீரச் செயல்கள் புரிதல் வேண்டும். இத்தகைப் பெரு

வீரனைப் புகழ்தல் சால்புடைத்து. உருத்திரன் இத்தகைப் புகழ்தற்கரும் மாபெரு வீரனுவான்.

இம் முதன் மந்திரத்துப் புகழ்தற்கரிய மாவீரன தியல்பு உணர்த்தப்படுகின்றது இதன்கண் ஆளப்படும் ஒவ்வொரு சொற்களும் நன்கு ஆராய்தற்குரியன.

ஸ்திர தந்வா—'தநு' வென்பது பகைவரை யொழித் தற்குரிய கருவியா யிலங்குவது. 'தந்' என்னும் பகுதிப் பொருள் 'ஒலித்தல், பயனடைதல்' என்றிருவகை. 'தந்வ' என்னும் பகுதிப் பொருள் 'செல்கதி, தடபுடல்' என்ப தாகும் இவற்றால் 'தநு' வென்னும் மொழி தோன்று கின்றது. 'மாற்றாரை யழிக்கும் கைவிடு படையும் விடாப் படை'யுமாம் என்பது கருத்துப் பொருள். வீரர்க்கு வில் லம்பு முதலிய படைகள் பகைவர் சேனைகளைத் தாக்கு தற்கு உதவுகின்றன. அவ்வாறே, மருத்துவர்க்கு மருந் துப் பொருட்களாகிய படைகள் பிணிகளோ டெதிர்த்துப் போராடி யழிக்க உதவுகின்றன. எனவே, இவ்விருதிறத் தார்க்கும் 'தந்' என்னும் பகுதிப்பொருள் எத்துணைத் தொடர்புடைய தென்பதைக் கீழ் காண்க :—

தந்

தநம்—சப்பத்து, செல்வம்	தநம்—உடைமை (Property)
தநு—கைவிடாப் படை	தாந்யம்-மூலிகை, காய், கனி
தந்வம்—கைவிடு படை	தந்வன்—நிலன், மண்
தந்வின்—வில்லாளி	தந்வந்தரி—மருத்துவன்

ஆழ்ந்து சிந்திக்கின் வீரனும் மருத்துவனும் ஒரு குடி யினராவர். இப்பொருள் கருதியே அவ்விருதிறத்தாரை யும் 'உருத்திரன்' என்னும் ஒரு மொழியால் குறிக்கப்படு கின்றது. தனம் போர் முகத்தான் பெறப்படும். அப்போர் படைக்கலன்களால் இயற்றப்படுகின்றது. அப்படைக்கலன் களை வீரர் உபயோகிக்கின்றனர். இப்பொருண்முறை வீரர் பகுதிக்குரியது. நிற்க, நோய்கள் நீக்குதற்குச் சிறந்த பண்புடைப் பொருட்கள் வேண்டும். மூலிகைகளும் பிற மருந்துப் பொருட்களும் சிறந்த பண்புடைச் சரக்குகளாம்.

மருந்துப் பொருட்கள் நிலத்தில் விளைகின்றன. அவற்றை மருத்துவர் பயன்படுத்துகின்றனர். இவ்வகையாக தநு அல்லது தங்வம் என்னும் மொழியினை இருபகுதியினு மாராய்க. எனவே, நிலைத்ததாக, உறுதியுடையதாக, மாறுபாடில்லாததாக, நலன் சிறந்ததாகக் குறைவடையாத தாக விருக்கின்ற படைக்கலன்களை ஸ்திர தங்வமென்பர்.

இத்தகைய வலிமை மிக்க வில்லும், [1] என்றும் மழுங் காக் கூரிய படைக்கலன்களும், [2] விரைந்து அம்பெய்யுந் திறனும், செருவில் பகைவர்மீது பாய்ந்து தாக்குமாற்றலும், [3] மாற்றாருடல் துணிக்கு முரனும், [4] நின்றவிடம் பெயராது கால் பின் வாங்காக் கலங்கா நெஞ்சமும், [5] பகைவரால் தோற்கடிக்கப் படாதவாறு யாண்டும் வெற்றியே பெறு தலும், [6] உடலால் உள்ளத்தால் அறிவால் உயிரால் பிற ருதவி நாடாத் தற்சுதந்திரனை பெரு வீரனாக மிளிர்தல் வீரர்க்குறு சீரிய நீர்மைகளாகும்.

இவ்வியல்புகளால் சிறந்த பெருவீரனே [7] களியாட் டயர்வானும், வெற்றி விழைவானும், வழங்கற் றன்மைய னும் காந்தியுடையானும், புகழுடையானும், காதலிக்கும் வினைபுரிவானும், உளக்களிப்புடையானும், கிளர்ச்சியுடை யானும், கொடையாளியும், கருணையுடையானும், உடல்வள முடையானும், அறிஞனும், ஆராய்வானும், காப்பாளனும், இன்பம் நல்குவானும், சிந்தித்துணர்வானும், சுதந்தர விருப்பனும், கைவினைஞனும், ஓவியனுமாகிய தேவனாவான். இத்தேவனே பிறர் துயர் நீக்கும் மாவீரனாகிய [8] உருத்திர னாவான். இச் செய்யுளான் உணர்த்தப்படும பண்புக்களைப் பயின்று மாவீரனாதற்கு முயன்றிடுக. இதன் கண் சிறப் பாக வீரரிலக்கணம் உணர்த்தப்படுகின்றது. சிறுபான்மை வருணனையாக மருத்துவனியல்பும் கொள்ளப்படும்.

வீரனும் மருத்துவனும்.

உ. எல்லா உயிர்களும் நற்காப்பைப் பெறுகின்ற பேரரசின் கண் வீரர் ஒளி சிறந்து மிளிர்கின்றனர். தம்மைக் காத்தற்பொருட்டு முயலுகின்றவன் காக்கப் பெறுகின்றான். யாவரும் நோயற்றவர்களாக வாழ்தற்குரிய நியதிகளை இல்லங்கடோறும் அமைத்திடுக.

உயிர்களைக் காக்கும் வீரர் பேரரசில் ஒளிபெறுவர். மாபெரும் வீரனுவான் நிலத்தினும் வானினும் பிறவிடத்தும் வதிகின்ற உயிர்கள் யாவற்றையுங் காத்தற்பொருட்டுப் பேரரசினை நிறுவுதற்கு விழைந்து வெற்றியை நாடுகின்றான். பேரரசினை நிலையிடுதலின் நோக்கமாவது பிறரை அடிமைப் படுத்தி அவர்களின் நுகர் பொருட்களைத் தங்கள் நலன் பெருக்கிடற்குப் பயன்படுத்தலன்று; உயிர்கள் யாவும் (க்ஷய) நன்னிலையில் வாழ்க்கை பெறுதற்கேயாம். யாவரையும் தக்கவகையிற் காத்துச் சமமான ஆளுகையில் முறை செய்தலே உண்மைப் பேரரசாம்.

இதில் [9] 'க்ஷயேண ஸாம்ராஜ்யேந' என்னுந் தொடரால் விளங்கக் கிடப்பன. ஒரு பேரரசாட்சியில் வாழ்வாரனைவரும் ஓரில்லின்கண் உறைகின்ற ஒரே குடும்பத்தினையொப்ப யாவற்றிலும் ஒத்த இன்பம் பெறுதல் வேண்டும். எல்லா நடபடிக்கைகளும் சட்டவரம்பிற் குட்பட்டதாகவும், யாவரும் சுதந்திரராக யாண்டும் வாழ்தற்கும் எதனையும் ஆய்தற்கும் முழுப் பொறுப்புடையவர்களாதல் வேண்டும். இஃது ஒரு பேரரசின் இலக்கணம். இதனுன் வைதிக சாம்ராஜ்ய அமைப்பு உயர்வுடைய தென்றோர்க. இத்தகைய உயர்வுடைய பேரரசில் வீரர் வெற்றியாளர்களாகவும் தேசுடையவர்களாகவும் பிறங்குவர்.

இச் செய்யுளின் பிற்பகுதி மருத்துவ வியலின்பாற் பட்டது. [10]மருத்துவர் பிணியுடையார் இல்லிற் போந்து, அவரது நிலைமையை நன்காராய்ந்து தக்க மருந்துகளுதவிப் பிணிதீர்த்திடுக. மக்கள் நோயின்றி வாழ்தற்குரிய முறையில் ஒழுகுதல் வேண்டும். நோய்கள் மிகுதியும் பக்குவ மடையாத உணவுகளானும், உண்ட வுணவு சீரணியாமையானும், சீரணிப்பதற்கு முன் அளவறியாது உண்ணலானும் தோன்றுகின்றன. இவ் அரிய கருத்தினை இச் செய்யுளில் [11] 'அங்-அமீவ' என்னும் மொழியால் அறிவுறுத்தப்படுகின்றது. இவ்வாறு நோயின்றித் தம்மைக் கொள்வானை [12] 'அவந்தி' என்றழைக்கப்படுகின்றது. தம்மைக் காத்தற்கு ஒருவன் திறனடைதல் வேண்டும். மருத்துவர் இத்தகையர்க்கு உதவிபுரிந்து தக்க நல்லுரைகள் வழங்குதல் வேண்டும். இதனுனே இப்பாவில் தம்மைத் தாம் காக்க விழைவார் காக்கப்பெற்று யாவரும் நலனுறுக

வென்று பகரப்படுகின்றது. வரம்பின்றி ஒழுகுவார்க்கு எவரும் உதவி புரியார். யாவரும் தம்மைக் காத்து நோயின்றி வலிமைபெற்று நீண்டாயுள் படைத்து வாழ்ந் திடுக.

மின்சாரமும் மருந்தும்.

ரு. மின்சார வெழுச்சியால் எவர்க்குந் தீது விளைக் கற்க. அவ்வாறே மருந்துகளால் எவர்க்கும் துன்பம் விளைக் கற்க.

அறிஞ! 13 (ஸ்வபிவாத) ஆயிரக் கணக்கான மருந் துப் பொருட்களிருக்கின்றன. அவற்றுள் மதலைகள் சிறு வர் சிறுமிகளின் இயற்கையோடொப்ப நன்மருந்துகளைச் சிந்தித்தாராய்ந்து அவர்க்கு வழங்கிடுக. மருந்துகளால் இயற்கையினின்று மாறுபாடடைதலுங் கூடும். மருந்து களை வீணாக உண்டல், மிகைபட உண்டல், வேளையல்லா வேளையி லுண்டல் முதலியன உடலுக்கு நலன் பயப்ப தன்று. சிறுவர் சிறுமியர் மதலைகளின் உடல் மிக நொய்மை யானதலால், அதற்குத் தக்கவாறு சாந்தமான மருந்துகளையே கொடுத்தல் வேண்டும்.

பரவெளியி னின்றெழும் மின்சாரம் நிலத்தில் உலவு கின்றது. மின் விழுதல் ஆதி தெய்விகத்தால் நேர்ந்த இடுக்கணென்பர். மின்னலால் தாக்கப்பட்டோன் உடன் இறந்துவிடுகின்றான். இவ் இடுக்கணி னின்று காத்துக் கோடற்கு ஆதி தெய்விக சக்தியை வழி படல் வேண் டும். பிணியாற்படும் துன்பத்தை மருத்துவன் அகற்று வான்; ஆதி தெய்விக இடர்களை யொழித்தற்கு மருத்துவனா லியலாது. ஆதி தெய்விக பரமாத்ம சக்தியே அதனின்று காப்பாற்றல்வேண்டும். ஆதலால் இறையை வணங்கிடுக. நாம் அடைய வேண்டும் உறுதிப் பொருட்களுக்குத் தடை யாக விருப்பவற்றை ஆய்ந்துகண்டு ஒழிக்கமாட்டாது வறிதே இறையைமட்டும் வணங்குதலால் எவ்விதப் பயனும் விளைந்துவிடமாட்டாது. இந்நிலைமையில் 'ஸ்வ-தா-வான்' தம்மைத்தாம் நன்கு ஆராய்ந்து தெளிந்து கொள்ளுதலே சிறப்புடைத்தாம்.

உருத்திர சூக்தம்

சினத்தின் வழிநின்ற கலுக.

ச. எவரும் யாரையும் அழியற்க. எவர்க்கும் துன்பம் விளைக்கற்க. சினம் முதலிய தீய பண்புக்களை எவரும் வளர்க்கற்க. போற்றத்தக்க நற்செயல்கள் யாவற்றையுங் கைக்கொண்டு நல்லொழுக்கால் பிறர்க்கு நலன்புரிந்து அயலாரைக் காத்திடுக.

இச் செய்யுளில் (க) கொலை புரியற்க. (உ) தொடர்புடையாரை வேறுபடுத்தற்க. (ங) சினத்தின் வழியே செல்லற்க. (ச) போற்றத்தகும் நற்செயல்களைக் கடைப்பிடித்திடுக. (ரு) நல்லொழுக்கால் யாவர்க்கும் நலன்புரிந்திடுக என்பன அறிவுறுத்தப்படுகின்றன. எவற்றையுங் கொல்லுதலும் தொடர்புடையாரை வேறுபடுத்தலும் செய்யத்தக்கனவன்று. சினத்தின் வழியே ஏகுதலால் பல கேடுகள் விளையும். இவற்றை நன்கு ஆய்ந்திடுக.

உயிரால் உடலால் உள்ளத்தால் அறிவால் பிறர் துயரகற்றும் வீரனியல்பும் மருத்துவனியல்பும்; அவ்வீரர் மருத்துவர்களின் ஆட்சித்திறமையும்; மருத்துவன் தன்னரசில் மனம்போனவாறு செல்லாது ஆய்ந்து நிதானித்துச் செல்லுதல் வேண்டுமென்பதும்; தம்மாலியலாப் பிற தெய்விகச் செயல்களுக்கு இறைவனை நினைத்திரங்கத் தூண்டுதல் வேண்டுமென்பதும்; தம்முள்ள உணர்வான் இறைவனை நினைந்து புரியவேண்டும் இரங்கற் செயல்கள்
14 கோல்லாமையும் புறங்கூறாமையும் வெகுளாமையும் அறநெறி கடைப்பிடித்தலும் பிறர்க்குதவலுமா மென்பதுவும் பிறவுமாம்.

ஆங்கில மொழிபெயர்ப்பு.

English translation by R. T. H. Griffith.

Rig Veda. VII 46.

1. To Rudra bring These songs, whose bow is firm and strong, the god of heavenly nature, with swift-flying shafts. Disposer, conqueror whom none may overcome, armed with sharp-pointed weapons : may he hear our Call.

2. He through his lordship thinks on beings of the earth, on heavenly beings through his high imperial sway. Come willingly to our doors that gladly welcome thee and heal all sickness, Rudra, in our families.

65

3. May thy bright arrow which, shot down by thee from heaven, flieth upon the earth, pass us uninjured by. Thou, very gracicus god, has and thousand medicines: inflict no evil on our sons or progeny.

4. Slay us not, nor abandon us, O Rudra: let not thy noose, when thou art angry seize us. Give us trimmed grass and rule over the living. Preserve us evermore, ye Gods, with blessings.

குறிப்புகள் :—1 திக்மாயுத—(திக்ம = கூரிய + ஆயுத = படைக்கலம்). 2 க்ஷிப்ரேஷு-க்ஷிப்ர-இஷு) விரைந்து செல்லும் அம்புகள். 3 வேதஸ்—துணித்தல் (to pierce) ஆளுதல் (Commandnig). 4 ஸஹமாந—ஸஹ = உறுதி, வன்மை, மாற்ரூர் தாக்குதலைத் தாங்கும் உரன், பகைவர் படை கண்டஞ்சாமை. 5 அஸாளஹ—(அ-ஷாட, அ-ஸாளஹ) தடைப்படாத, இடையூறு கடக்கத்தக்க (Irresistible) யாண்டும் வெற்றி பெறுதல். 6 ஸ்வதாவ்நே—(ஸ்வ-தா-வான்) ஸ்வ-தமது, தா-தாரண சக்தி அறிவு ஆற்றல் முதலியன, வான்-உடையவன். பிறருதவி நாடாதவன் (Self-dependant. Dr, Muir) இராத் துரைமகனர் Independant whose glory is inherent என்பர். 7 இவை 'தேவ' என்னுஞ் சொல்லின் காரணப் பொருட்கள். 8 ருத்ரன்—(ருத் + த்ர) பிறர் துயர் அகற்றுபவன். 9 க்ஷய = 'க்ஷி' என்னும் பகுதியடியாற் ரேன்றியது. (1) சட்ட வரம்பிற் குட்பட்ட ஆளுதல் (2) சாசனம், ராஜ்ய சாசனம் (3) தன்னரசு, தற்சுதந்திரத் தலைமைத் தன்மை (4) உறைதல், உறைவிடம் (5) யாண்டும் நிகழ்ந்தவற்றை யுணர்தல் (6) இயக்கம் என்பன. 10 துர: உபசர-துர: = வாசல், வீடு, உறைவிடம். எனவே பிணியாளர் வீட்டிற் சென்று உதவி புரிந்திடுக என்பதாம். 11 அந்-அமீவ—அக்கினி மந்தம் அல்லது சீரண சக்திக் குறைவால் உணவு சீரணியாமல் பக்குவமடையா தெழுகின்ற சாரத்திற்கு 'ஆம், என்பர். இவ் ஆமம் பல நோய்களை விளைவிப்பது (சுச்ருதம்), பக்குவமடையாத உணவு, அசீரணம், பாகமடையாத காய் கனிகள், மலச் சிக்கல் முதலியன இச் சொற் கருத்தாம். 12 அவந்தி—'அவதி ரக்ஷதி இதி அவந்தி' தம்மைத் தாம் காப்பாரை அவந்தி (Protecting and defending) என்பர். 13 ஸ்வபிவதா—பிராணனை வயப்படுத்தும் யோகி (சாய

ணர்) ஆன்றோர் வாக்கு (whose words are very authoritative) நிருக்தம்+7. பதபாடத்தில் 'ஸு-அபிவாத-அறிவு வளர்ச்சிக்காக ஓதுதல், தம் பொருட்டுதவல் என்பன. ஸு-அபி-வாத=அறிஞன், கேள்வியுடையான், ஈரமுள்ளான் என்பன (பண்டிதர் இராத்) 14 ஒப்பு நோக்குக.

> "ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
> பின்சாரப் பொய்யாமை நன்று" (குறள் 323)

பல்கிரேட் நகரில் உபவாச சங்கம் ஒன்று ஏற்பட்டிருக்கிறதாம். இதை ஸ்தாபித்தவர் அலெக்ஸி ஸோவரின் என்பார். நாற்பதுநாள் உபவாசம் எந்த நோயையும் குணப்படுத்தும் என்பது இவருடைய கொள்கை. இரண்டு வருஷத்துக்கு முன்பு பல்கிரேட் போலீசார் இவரை வேறொரு குற்றவாளி என்று தவறாக எண்ணிக்கொண்டு சிறையிலடைத்து விட்டார்களாம். இதைக் கண்டிக்கும் வாயிலாக அவர் உண்ணாவிரத மனுஷ்டிக்கத் தொடங்கினார். நாற்பது நாளைக்குப் பின்னர் தம் உடம்பிலிருந்த நோய்கள் எல்லாம் நீங்கி நல்ல பசி எடுத்ததைக் கண்டு அவர் ஆச்சர்யமடைந்தாராம். அது முதல் அவர் தன் காலத்தையும் பணத்தையும் உபவாச சிகிச்சைக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதிலேயே கழித்து வருகிறாராம்.

உலகிலேயே மிகப் பெரிய தொழில் நிர்வாகி கானடாவைச் சேர்ந்த மிஸ்டர், எட்வர்ட் வெண்ட்வொர்த்பூட்டி, என்பவராவார். கனடியன் பசிபிக் ரயில்வே கம்பெனியில் இவர் முதன் முதலில் வேலைக்குச் சென்றபோது வாரச் சம்பளம் $2\frac{1}{2}$ பவுன் பெற்றார். இப்போது அவர் மேற்படி கம்பெனியின் அக்கிராசனர் அவருடைய ஆதிக்கத்தில் 20,000 மைல் ரயில்பாதைகள், 5 லட்சம் பவுன் பெறுமான ஹோட்டல்கள், 83 கப்பல்கள், 15,000 மைல் தந்திக் கம்பிகள், 40 லட்சம் பவுன் பெறுமான நீர்ப்பாசன அமைப்புகள், லட்சக் கணக்கான ஏக்கரா மரமறுக்கும் தொழிற்சாலைகள, மற்றும் 100 தொழில்களும் நடைபெறுகின்றன! ஒரு லட்சம் தொழிலாளர் அவர் மேற்பார்வையில் வேலை செய்கின்றனர்.

ஜெர்மனி தேசத்தின் தலைநகரான பர்லினின்றும் வெளியாகும் ஓர் பத்திரிகையின் வண்ணம், உலகிலேயே யாவரைக் காட்டிலும் அதிக வயதான மனிதன் மத்திய ருஷியாவிலுள்ள ஓர் கிராமத்தில் வசிக்கின்றானாம். இவனது பெயர் சட்சௌஸ்கியாம். இவனது தற்போதைய வயது 115, ருஷியா தேசத்திலேயே வசிக்கும் மலர்பேவா என்ற ஸ்திரீயின் வயது 136.

பழமொழி திருத்தம்

களவுங் கற்று மற.

(ஆசிரியர். து. மாணிக்க நாயகர், புதுவை.)

எண்டிசை போற்றுந் தண்டமிழ் மொழியில் வண்டமிழ்ப் புலவர், மண்டமான் பான் மக்கட் பொருட்டுச் செவ்விதி னுவன்ற செஞ்சொற் பழமொழிக ளெண்ணிறந் தனவாக, அவற்றை நீக்கிச் "களவுங் கற்று மற" எனும் முறையற்ற வோர் பழமொழியைப் பற்றி யிவணாராயப் புகுந்த தென்னென நண்பர்கள் ஐயுறலாம்! ஆம் ஐயுற வேண்டுவதே!

மெய்ந் நெறி செல்லா நிற்கு மொருவனைப் பற்றி யெவர்க்குங் கவலையின்றாகப் பொய்ந் நெறியிற் படரும் மற் றொருவனைப் பற்றிய சிந்தனை—அதாவது அவனைத் திருத் தும் எண்ணம் தோற்றுவதியற்கை. அம் முறை யானே தவறாக வழங்கப்படும் இம் முதுமொழியால், நல்லுலகந் தவறுதலுக் கிடமியற்றிக் கொள்ளுமாகலா னதைப்பற்றி யீண்டு சிறிது கவனிப்பாம்.

"களவுங் கற்று மற" என்பது ஓர் பழமொழி யென் பதைப் பற்றி நந்துணைவர்கட்குப் புதிதாக நவில வேண்டுவ தின்றென வுன்னுகிறேன். "களவுங் கற்று மற" என்பது சரி. அஃது தவறான தன் றெனவும், இவ்வுலகிற் பிறவி பெற்ற ஒவ்வொருவரும், உலக சம்பந்தமான சகல செயல் களையும் அறிந்திருக்க வேண்டுவ தின்றாகலின், பிறர் பொரு ளைத் திருடும் ஓர் கெட்ட வழக்கத்தையுங் கற்று, அதன் பின்னர் அதை மறந்துவிட வேண்டுமெனவு மிதற்குக் கருத் துங் கூறி நம்மவர்களிற் பலர் இருந்து வருகின்றனர்.

இஃதிங்ஙனமாக, வேறு சிலர், "களவுங் கற்று மற" என்பது தவறு. அது "களவுங் கற்றும் அற" என்று பொருள் கொடுக்கக் கூடியது என்று கூறிக் களவு என்ப தற்குத் திருட்டையும் கற்று என்பதைப் பெயர்ச் சொல் லாகக் கொண்டு கற்று என்பது களவைப்போலவே கெட்ட குணமுள்ள பொய்யையோ, கொலையையோ குறிக்கு

மென்று அர்த்தம், தமக்கே விளங்காமற்கூறி, அவ்விரண்டை யும் அற = ஒழித்து விடு என்றும் பொருள் கூறுகின்றனர்.

இஃது மேக, மற்றுஞ் சிலர், "களவுங் கற்று மற" என்பதுந் தவறு. "களவுங் கற்றும் அற" என்றிருக்க வேண்டியதென வாய் கூசாமற் புகன்று, "நீ திருட்டைக் கையாடாமல் அகற்றுவதுடன் அதை மறந்து விடு" என்று பொருளுங் குறித்துப் பிழையுறப் புகலா நிற்பர்.

"களவுங் கற்று மற" என்ற முதுமொழி முறை தவறியதாக விருத்தலானும், ஆன்றோர் கருத்துக்கு முலக வழக்கிற் மாறுபாடாமாறு நின்று வழங்கப்படுவதே யிழுக் காக அஃதுடன் "களவுங் கற்றும் அற" என்பதும், "களவு மகற்று மற" என்பதும் சிற்சிலரான் வழங்கப்பட்டு இடர்ப் படா நிற்கின்றன. ஆகலின் நாம் ஆராய்ச்சி முகத்தா னிம் மூன்றையும் புறத்திறுக்க வேண்டுவதே முறையாம்.

"களவுங் கற்று மற" என்பது சரியா வென்பதைப் பற்றி முன்னர் கவனிப்பாம்.

நமது முன்னோர்களாகிய பண்டைத் தமிழ்ப்புலவர் கள் மக்கட் குழாத்திற் கின்றியமையாத சில நற்குணங் களைக் கோடன் முறையையும், பல தீக்குணங்களைத் தள் ளும் நெறியையுந் தாமியற்றி யுதவிய நூற்களினிடை யிடையே புகுத்திப் போதித்தேகினர். அவைகளைப் பிழிந் தெடுத்த சாரமே பழமொழிகளாம்.

பொய், கொலை, கள், களவு, சூது அல்லது காமம். என்பன ஐந்தும் மக்கட்டொகுதிக் களவிகந்த பேரிடுக் கண் களை யெய்துவிக்குந் தன்மையன வாகலின், அவைகளை முற்றும் விலக்க வேண்டுமென அறிஞர்க ளறைந்து மறைந் தனர். அன்னார் தம் வாக்குக்கிலக்காய் இற்றை ஞான்றும் அறிஞருலகம் ஒழுகி, அவ்வார்த்தைகளைப் பொன்னேபோற் போற்றி, ஆய்ந்து, சிந்தித்துப் பயனெய்தி வருவதைக் காணுதார் யார்?

விலக்க வேண்டியவை ஐந்தனுள் களவும் ஒன்றே. எனவே, களவையு மதன் கொடுமையையும் பற்றி யிவண் ஓர் தனிக் கட்டுரை தீட்ட வேண்டுவதின்றாயினும், அதைப்

பற்றி யிரண்டொரு மேற்கோள்களைக் காட்டவேண்டுவது மின்றி யமையாத தெனத் தோற்றுகிறது.

"புலையுங் கொலையுங் களவுந் தவிர்" (ஔவை.)

வெளவு த னீக்கு (சுப்பிரமணிய பாரதியார்.)

"உள்ளத்தா லுள்ள லுந் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தாற் கொள்வோ மெனல்" (வள்ளுவர்)

"பிறர்மனை யஞ்சுமின் பிழை யுயிரோம் புமி
னறமனை காமி னல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யு
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்"

(இளங்கோவடிகள்)

சென்ற சிறிது காலத்துக்கு முன்பு இதுவரையிலும் கண்டு பிடிக்கப்படாத சமுத்திரத்தின் அதிக ஆழமான இடம் ஓர் ஜப்பானிய கப்பலால் கண்டு பிடிக்கப்பட்டது. இவ்விடம் டோகியோ வுக்கு தென்கிழக்கே 154 மைல்கள் தூரத்திலுள்ளது. இங்கு சமுத்திரத்தின் ஆழம் 32,636 அடிகள், இவ்விடம் கண்டுபிடிக்கும் வரையிலும், மனிதர்கள் பசிபிக் மகா சமுத்திரத்திலே லாட்ரோன் தீவுகளுக்கருகாமையிலுள்ள இடந்தான் ஆழமான இடமென்று கருதிவந்தனர். இதன் ஆழம் 31,614 அடிகள்தான்.

ஜெர்சி என்னும் நகரிலே உள்ள கடிகாரந்தான் உலகிலேயே பெரியது. கடிகாரம் இக்கடிகார டையலின் (அதாவது முள்ளுகள் சுற்றும் இடம்) குறுக்களவு ஐம்பது அடிகள். நிமிஷமுள்ளின் நீளம் 37கால் அடி; சாதாரண ஓர் வீதியின் அகலம் இவ்வளவு தானிருக்கும். இரவில் வெகு தூரத்திலிருந்தும் மணி பார்ப்பதற்காக இதனுள்ளே 120 சிறிய எலெக்டிரிக் பல்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மணியைக் காட்டும் முள்ளின் நீளம் 27 அடி, இது நிமிஷ முள்ளைவிட அதிக அகலமானது, இதனடியில் 100 எலெக்டிரிக் பல்புகளிருக்கின்றன. இக்கடிகாரத்தின் எடை நான்கு டன்கள்.

லண்டன் நகரிலேயுள்ள பில்பீசு சுகார்டன் என்னும் பங்களாவிலே ஓர் கிளி இருக்கின்றது. இதன் வயது 130. இதன் மார்பிலும் முதுகிலுமுள்ள சிறகுகள் விழுந்துவிட்ட போதிலும் வால் பக்கம் நல்ல அழகான வர்ணமுடையதா யிருக்கின்றது. இவ்வளவு வயதாயினும் பகல் வேளையிலெல்லாம் இது நன்றாகப் பேசுகின்றது. ஓர் கயிற்றில் ஊஞ்சலாடுகின்றது. ஓர் பந்துடன் விளையாடுகின்றது.

படிக்குப் படி

ஒரு சிறு கதை

(என். எஸ். சுந்தரான் எழுதியது)

வாணியம்பாடி அ. மீ. ரா. அப்துல் ரஹிமான் சாய்பு அவர்களைத்தெரியாதவர்கள், வாணியம்பாடியிலும், சென்னையிலும், மிகச் சொற்ப மென்றே சொல்லலாம். ஸ்ரீமான் சாய்பு வாணியம்பாடியில், ஒரு பெரிய தனிகரும், வணிகருமாவர். சென்னையிலும், வாணியம்பாடியிலுமாக மேற்படியாருக்கு இரண்டு தோல் மண்டிகள் உண்டு. வியாபாரமும் செவ்வனே நடைபெற்று வந்தது.

ஒரு சமயம், ஸ்ரீமான் சாய்பு வியாபார விஷயமாக, சென்னையிலிருந்து பெங்களூருக்குப் போவதற்காக, சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். வண்டி புறப்பட சொற்ப நேரமே யிருந்ததால், பிளாட் பாரத்தில், ஜன நெருக்கடியும் அதிக பரபரப்பு மிருந்தது. சாய்பு ஒவ்வொரு வண்டியாகப் பார்த்து விட்டு, கடைசியில் "ரிசர்வட்" என்று எழுதி கதவில் ஒட்டப்பட்டிருந்த ஒரு இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏறினார்.

காலில் மாட்டி யிருந்த, புதிய "ஜடா" "கிரீச்" "கிரீச்" என்று கத்திக்கொண் டிருந்தது. அரையில் ஒரு லுங்கியும், தேகத்தில் பிடிப்பான ஒரு பனியனும், அதற்கு மேல் வேலைப்பாடுகளுடன் கூடிய பால் போன்ற வெண்மையான நீண்டதோர் மல் ஜிப்பாவும், தலையில் துருக்கி குல்லாவும், தோளில் மூலை வைத்து மடித்துப் போடப்பட்டிருந்த உருமால் ஒன்றும், ஆகிய இவைகளே அவர் அணிந்திருந்தவை. இவ்வித ஆடம்பரங்களுடன் ஸ்ரீமான் சாய்பு வண்டியில் ஏறினார். வண்டியில் தனக்கு முன்னதாகவே, ஐரோப்பிய கனவான் ஒருவர் வந்து உட்கார்ந்திருந்தார். நமது சாய்பு கொஞ்சமும், அவரைப்பற்றி லக்ஷ்யம் செய்யாது அவர் முன் போய் உட்கார்ந்தார். வண்டியும் புறப்படும் நேரமாய் விட்டது. "டாங்! டாங்!! டாங்!!! என்று மணியும் அடிக்கப்பட்டது. அடுத்த நிமிஷம், வண்டி மெல்ல நகர ஆரம்பித்து. வேகமாய் ஓடவும் தலைப்பட்டது.

சாய்பு வந்த தன்மையும், தனக்கு முன் சிறிதும் பய மின்றி "ரிசர்வட்" வண்டியில் உட்கார்ந்து கொண்டதும், நமது ஐரோப்பியக் கனவானுக்கு சொல்ல முடியாத ஆத் திரத்தைக் கொடுத்தது. கண்கள் சிவந்தன. சாய்புவை ஒரே அடியில் எமலோகம் அனுப்பத்தயாரா யிருப்பவரைப் போல் தோன்றினர். ஆனல் சாய்புவின் ஆடம்பரமான தோற்றமும், உல்லாசமான நடையும், கம்பீரமான பார்வை யும், அவரை வாய் திறக்கவொட்டாது ஆக்கின. ஆகவே இஞ்சி தின்ற குரங்கு போல் துரை மன எரிச்சலோடு உட் கார்ந்திருந்தார் வண்டியும் வேகமாகப் போய்க்கொண் டிருந்தது. இடையில் 4, 5 ஸ்டேஷன்களும் கழிந்து விட் டன. வெயிலின் கொடுமையாலும், வயிறு நிரம்ப சாப் பிட்டு இருந்ததாலும், நமது சாய்பு தன் இடத்திலேயே, சிறிது சாய்ந்து கண்ணயர்ந்தார். பார்த்தார், துரை. அதுவே தக்க சமயமெனக் கொண்டார். மெதுவாக சாய்பு வின் புதிய ஜடா இரண்டையும், தூக்கி வெளியே எறிந்து விட்டார்.

ஒரு மணி நேரம் கழிந்தது. வண்டியும், 5, 6 ஸ்டே ஷன்களைத் தாண்டி, ஒரு பெரிய ஸ்டேஷனண்டை மெது வாக வந்து கொண்டிருந்தது. சாய்பு மெதுவாக கண் விழித்து, வண்டி நிற்கப் போவதை யறிந்து, கீழிறங்கி தாகத்துக்கு ஏதாவது சாப்பிட்டு வரலாம் என்ற எண்ணத் துடன் ஜடாவைத் தேடினர். ஐயோ! ஜடாவைக் காண வில்லை. சாய்பு கொண்ட ஆச்சரியத்திற்கு அளவு சங்கை யில்லை. ஜடா காணமற் போனது ஒரு செப்படி வித்தை யாகத் தோன்றிற்று. வண்டியில், தன்னுடன் ஐரோப்பிய ரைத் தவிர வேறொருவரும் இல்லை யாதலால், ஜடா காண மற் போனதற்கு அவரே தான் காரணமாயிருப்பார் என்ற நினைப்பு வந்தது. அடுத்த நிமிஷத்தில், "உயர்தர, சர்க் கார் உத்தியோகஸ்தர் போலிருக்கும் இவர் ஜடா காணமற் போவதற் குரியதான ஒரு இழிவான வேலையையும் செய் வாரா?" என்ற சந்தேகமும் சாய்புவின் மனதில் உதித்தது. யோசனையில் ஆழ்ந்தார் நமது சாய்பு. பழைய விஷயங்கள் ஒவ்வொன்ருக ஞாபகத்துக்கு வரத்தலைப்பட்டன. முதலில் தான் வண்டியில் வந்து ஏறியவுடன் துரை காட்டிய வெறுப் பான பார்வையும், சுழித்த முகமும் ஞாபகத்துக்கு வரவே,

ஜடா காணமற் போனதற்கு, துரைதான் காரணமாயிருப்பார் என்ற ஒரு தீர்மானத்துக்கு வந்தார். மெதுவாக இங்கிலீஷில், "என் ஜடாவைப் பார்த்தீர்களா?" என்று மரியாதையாக வினவினர். உடனேயே துரை "ஐ டு நாட் நோ, வாட் ஐ ஹேவ் காட் டுடு வித்யூவர் ராட்டன் ஷூ" (I do not know, what I have got to do with your rotten shoe) (எனக்குத் தெரியாது, உன் பழஞ்செருப்பு எனக்கெதற்கு?) என்று முறுக்காகவும், கோபமாகவும் விடை யிறுத்தார். பார்த்தார் சாய்பு. துரை விடை யளித்த முறையே அவர் மேல், தான் கொண்ட சந்தேகத்துக்கு பெருத்ததொரு சான்ருயிற்று. சாய்பு பேச்சை அத்துடனே நிறுத்திவிட்டு கீழிறங்கி கொஞ்சம் "டீ" வாங்கி சாப்பிட்டு விட்டு, பழைய படி வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். மெயில் வண்டியும் புறப்பட்டு விட்டது.

சாய்பு இயற்கையிலே, சூட்சும புத்தியுடையவராதலால் துரைக்குச் சரியான பாடம் கற்பிக்கயோசனை செய்து கொண்டிருந்தார். துரையும் தான் செய்த வேலையில் ஜெயமடைந்ததாக நினைத்துக்கொண்டு, மெதுவாக தன்னுடைய படுக்கையை இழுத்து, தொப்பியை (Hat) க் கழற்றி ஒரு புறம் வைத்து, சாய்ந்து கொண்டார். வண்டி வேகமாய் போய்க் கொண்டிருந்ததாலும், காற்று சுகமாய் வீசிக் கொண்டிருந்ததாலும், படுக்கையில் சாய்ந்த துரை சிறிது நேரத்தில் குறட்டை விட்டு, நித்திரை செய்ய ஆரம்பித்தார். சாய்பு இதுவே சரியான வேளை என்று நினைத்து, மெதுவாக துரையின் தொப்பியை எடுத்து, வேகமாய்க் காற்றின் போக்கில் வீசி எறிந்துவிட்டு தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டார்.

சுமார், 40, 45 நிமிஷத்தில் வண்டி பெங்களூர் கண்டோன்மெண்டு ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருந்தது. துரையவர்களும் கண் விழித்து வண்டி பெங்களூர் வந்து விட்டதை யறிந்து, சாமான், படுக்கை முதலியவைகளை சரி பார்த்து இறங்க ஆயத்தமானர். முதலில் தொப்பியைத் தேடினர்; காணவில்லை. படுக்கையைப் பார்த்தார்; வண்டியின் மேற்றளத்தைப் பார்த்தார். பெட்டியின் பின் பக்கத்திலும் பார்த்தாய் விட்டது. ஐயோ! தொப்பியைக் காணவில்லை. துரையவர்களுக் குண்டான ஆத்திரத்திற் களவே

யில்லை. கடைசியில் சாய்புவைப் பார்த்து, "என் தொப்பி யைப்பார்த்தீரா?" என்று வினவினர். சாய்புவும் உடனேயே "ஆம், என் ஜடாவைத் தேடப் போயிருக்கிறது. ஜடா வுடன் சீக்கிரம் வந்து சேரும்." என்று தாழ்மையாகவும், குறும்பாகவும், விடை யளித்தார்.

அப்பொழுதே தான் முன் சாய்புவுக்குச் செய்த, அப ராதத்தை நினைத்துக்கொண்ட துரை, சாய்பு தனக்குக் கற்றுக்கொடுத்த படிப்பினைக்கும், சாய்புவின் புத்தி சாதுர் யத்திற்கும், அவரை மெச்சி சாய்புவின் கையைப்பிடித்து, சந்தோஷத்துடன் குலுக்கி, மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வண்டியை விட்டு இறங்கிப் போய் விட்டார்.

அயர்லாந்து பொதுத் தேர்தலுக்கு, 152 ஸ்தானங்களுக்கு, 356 பேர் நிற்கின்றனர்.

லண்டனில் கட்டப்படும் புதிய இந்தியா மந்திரி ஆபீசுக்கு 300,000 பவுன் செலவாகுமாம்.

இலங்கைக் கவர்னர், சர். ஹியுகிளிஃவ்வர்ட் புறப்பட்டுவிட் டார். மிஸ்டர் பிளச்சர்ட் உதவிக் கவர்னராக நியமிக்கப்பட்டிருக் கிறார். புதிய கவர்னர் ஆகஸ்ட்மீ 28வ வருகிறார்.

அமெரிக்காவில் எடிசனுடைய 80-வது பிறந்தநாள் கொண் டாட்டம் நடைபெற்றது. இவர், போனகிராப் மின்சார சக்தி, ஆகியவைகளைக் கண்டு பிடித்தவர்.

இங்கிலாந்தில் மே மாதத்தில் வேலையற்றுத் துன்புறுவோரின் தொகை 678200. சென்ற எழு வருஷங்களுக்குள் இதுதான் குறைந்த தொகையாம்.

ஸ்பெயின் தேசத்தின் புதிய தேசீய அசெம்ப்ளி ஜுன்மீ 13ம் தேதி கூடிற்று. 300 அங்கத்தினர் இருந்தார்கள். இது ஆலோ சனை கூறும் சபையாகவே இருக்கிறது.

நெருப்புக்குச்சியின் 60-வது பிறந்த தினக் கொண்டாட்டம் ஐரோப்பாவில் சில இடங்களில் நடந்தது. 1835-ம் ஆண்டில் ஜானேஸ் இரின்யி என்னும் ஹங்கேரியர் முதலில் நெருப்புக் குச்சி யைச் செய்தாராம்.

...ஆவணக் காப்பக... 210370. ...600 008

புகையிலைப் பயிர்.

உலகத்தில் ஜனங்கள் நாளுக்குநாள் புகையிலையை அதிகமாக விரும்பி உபயோகித்து வருகின்றனர். எனவே, உலகத்தின் பல பாகங்களிலும் புகையிலையை மிகுதியாகப் பயிரிடுகின்றனர். புகையிலை இந்தியாவில் நன்றாய் விளையக் கூடிய பயிரல்ல. எனினும் இன்றுவரையில் அதிக சாமர்த்தியத்தோடு தான் விளைவிக்கப்பட்டு வருகிறது. உலகத்திலேயே அதிகப் புகையிலை பயிரிடும் தேசங்களில் இந்தியா தான் இன்று இரண்டாவதாயிருக்கிறது. புகையிலை பயிரிடுவதால் அதிக லாபம் கிடைக்குமென்பது உண்மையே. ஆனால் பயிரிடும்போதும், பிறகு பதனிடும்போதும் அதிக ஜாக்கிரதையோடிருக்கவேண்டியிருக்கிறது. அதிகக் கவனம் செலுத்தவேண்டியிருப்பதாலும் தாராளமாக எரு விடவேண்டியிருப்பதாலும் சொற்ப நிலங்களிலேயே பயிரிட சாத்தியமாகிறது.

இந்தியாவில் பயிரிடப்படுமிடங்கள்.

புகையிலை இந்தியாவில் ஒவ்வொரு வருஷமும் ஏராளமாகப் பயிராகிறது. ஆனால் விவசாய இலாகாதார் எவ்வளவு சிரத்தையெடுத்துவந்தபோதிலும் எல்லா குணங்களிலும் மற்ற தேசப் புகையிலையைவிட தாழ்ந்ததாகவே இருக்கிறது. புகையிலை பயிரிடும் தொழிலை விருத்திசெய்து அதிக லாபம் பெற விரும்பும் தொழிலாளர்கள் உயர்வான புகையிலையைப் பயிரிட்டு மேன்மையான புகையிலையை அடைய முயல்வதே மேல். அவ்விதம் செய்தால் தான் அதிகவிலைக்கு விற்று லாபம் பெறமுடியும். இந்தியாவில் இரண்டுவிதப் புகையிலைகள் பயிராகின்றன. தக்ஷிணபாகத்தில் கொஞ்சம் கரிசல் நிறமான புகையிலையும், வடபாகத்தில் மஞ்சள் நிறமான ஒருவகைப் புகையிலையும் பயிரிடப்படுகின்றன. பர்மாவின் கீழ்ப் பிரதேசங்களிலும் அராகானிலும் காவானாவிலிருந்து கொண்டுவரப்பட்ட புதுமாதிரியான புகையிலையைப் பயிரிடுகின்றனர்.

வங்காளம், தென்னிந்தியா, பர்மா முதலிய இடங்களில் புகையிலையை அதிகமாகப் பயிரிடுகின்றனர். அவ்

விடங்களில் தான் அப்பயிர் விளைவுக்கு ஏற்ற சீதோஷ்ண மிருக்கிறது. வங்காளத்தில் ரங்கபுரியைச் சுற்றிலுந்தான் அபரிமிதமாகப் பயிராகிறது. மற்றும் ஜால்பெய்குரி, மைமன்சிங், தினஜ்பூர், டாக்கா, ஜேஷ்பூர் முதலியவிடங் களிலும் பயிராகின்றன. பீகாரில் மாங்கீர் என்ற விடத்தில் தான் அதிகமாகப் பயிராகிறது. தென்னிந்தியாவில் கோயமுத்தூர், சேலம், திருச்சினப்பள்ளி, மதுரை, கிருஷ்ணா, கோதாவரி, குண்டூர் முதலிய விடங்களில் ஏராள மாகப் பயிராகிறது. சென்னை, திருச்சினப்பள்ளி, திண்டுக் கல், பாலக்காடு, காகினடா முதலிய இடங்களில் புகையிலைத் தொழிற்சாலைகளிருப்பதோடு, பெரிய வியாபார ஸ்தலங்க ளாகவு மிருக்கின்றன. பர்மாவில் மாண்டலே ஸாசெயிங், பாகோக்கு, தோங்கு, தாராவடி, பெகு, மாபின், பாஸீன் முதலிய விடங்களில் பயிராகின்றன.

வங்காளத்தில் புகையிலை.

கிழக்கு வங்காளத்தில் சணல் எப்படி முக்கியமான பயிராயிருக்கிறதோ அவ்விதமே வட வங்காளத்தில் புகை யிலை அதிகப் பணந்தரும் பயிராக இருக்கிறது. அங்குள்ள விவசாயிகள் கிஸ்தி செலுத்தவும், கடனைக்கொடுக்கவும் புகையிலை விளைவையே எதிர்பார்த்திருக்கின்றனர். அப் பயிர் செய்வதற்கு வேண்டிய ஞானம் அவர்களிட மில்லா மையால் அவர்கள் அதிகலாபமடைய ஏதுவில்லாம லிருக் கிறது. புகையிலையின் தேவை தினம் தினம் அதிகரித்து வருகிறது. எனவே ஒழுங்கான உயர்ந்த புகையிலையைப் பயிரிட்டு லாபம் பெறவேண்டுமாயின் விவசாயிகளிடம் புதிய ரசாயன முறையில் பயிரிடும் ஞானமிருக்கவேண்டும். புகையிலையின் குணம் அது விளையும் நிலத்தின் தன்மையை யும் பொறுத்திருக்கிறது. மிருதுவானதாகவும், தண்ணீர் சீக்கிரம் வடியக்கூடியதாகவும், மணல் கண்டமாகவும் புகை யிலை பயிரிடும் நிலமிருக்கவேண்டும்.

விதைக்கும்போது கவனிக்க வேண்டியவை.

“இந்திய ரசாயன விவசாயி” என்ற புத்தகத்தில் ஸ்ரீ. ஆர். எஸ். கெச். “புகையிலைச்செடி வெகு மிருது வான சிறிய விதையைக் கொடுக்கிறது. ஆகையால் விதைக் கும் இடம் நன்றாய் செப்பனிட்டதா யிருக்கவேண்டும்.

அதற்கு முக்கியவழி, நிலத்தைப் பக்குவப்படுத்துவதே யாகும். விறகுத் துண்டுகளை விதைக்கு மிடத்தின்மீது போட்டு கொளுத்துவதனுல் நிலம் பண்படுகிறது. அதோடு மண்ணில் பயிரைக் கெடுக்கக்கூடிய வியாதியோ, பூச்சி களோ இருப்பினும் அழிந்துவிடுகின்றன. விதைக்கும் இடம் கொஞ்சம் உயர்ந்த இடத்தில் இருக்கவேண்டிய தோடு முடியுமானுல் நிழலிலிருப்பதே மேல். சீக்கிரம் பயிராக வேண்டுமானுல் நிலம் அதிகப் பொலபொலப்புள்ள தாகவும் இருக்கவேண்டும்.

பறித்து நடும் விதம்.

விதைக்குமிடம் அதிக மழையாவது அல்லது அதிக சூரிய உஷ்ணமாவது படாததாயிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். விதைப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்பே இடத்தை செப்பனிட்டு விடவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் நிலத்திற்குத் தகுந்தபடி எருவிடவேண்டும். விதைக்குமிடத்தை நிரவும்போது எருவிடுதல் நலம். விதைக்கும் நிலத்திற்கு ஸள்பர்பாஸ்பேட், பொடாஷ் ஸல் பேட், ஸோடா நைட்டிரேட் முதலிய எருக்களைப் போடு வதே மேல். ஒரு காலன் தண்ணீரில் ஒரு அவுன்ஸ் வீதம் ஸோடா நைட்டிரேட்டைக் கலந்து விதை தெளிக்கும் இடங்களில் தெளிக்கவேண்டும். அத்தண்ணீரையே மாலை யில் சாதாரண தண்ணீர் தெளிப்பதற்கு பதிலாக உபயோ கிப்பது மேல்.

ஒரு ஏக்கர் நிலத்தில் புகையிலைப் பயிரிட ஒரு அவுன்ஸ் விதைவேண்டும். விதைப்பதற்கு முன் ஒருவரிடம் எவ் வளவு விதைகளிருக்கின்றனவோ அதற்கு இரண்டு அல்லது மூன்று பங்கு அதிகமான நல்ல மண்ணைப் போட்டுவைக்க வேண்டும். அப்படிக் கலந்தபடியே பூமியில் விதைப்பதால் விதையின்மேல் அதிக மண் விழுந்துவிடாதபடி இலேசாக விழுந்திருப்பதோடு பிற்காலத்தில் முளைத்து செடி நன்ருய் கிளம்புவதற்கும் உதவி புரிகிறது. ஐந்து அல்லது ஏழு வாரஞ் சென்ற பிறகு அவைகளைப் பறித்து வேறு இடங் களில் நடவேண்டும். செடியைப்பறித்த பிறகு 100-க்கு 5-வீதம் பாரிஸ் பச்சை கலந்த தண்ணீரில் வேரை கொஞ்சம் அமுக்கிவைப்பது சிலாக்கியம். இப்படிச் செய்தால் பிற்

காலத்தில் புழு, பூச்சி முதலியன வேரைத் தின்று கெடுத்து விடாது.

செடி ஆறு அல்லது எட்டு அங்குல மிருக்கும் பொழுது பறித்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு போக லாம். அவற்றை நட மப்பு மந்தாரமான மாலையே மேல். அவ்விதம் செய்தால் சூரியனுடைய உஷ்ணம் படாதபடி ஒரு நாளிரவு முழுதும் அதற்குக் கிடைக்கிறது. அடிக்கடி தண்ணீர் ஊற்றவேண்டியது மிகவும் அவசியம். சாத்திய மானால் வேரூன்றுகிற வரையில் இலைகள் வைத்து மறைப் பது நலம். நட்ட சில தினங்களுக்குப் பிறகு சில சொற்ப மழைத் தூற்றல் படுவதால் நன்மையே. நட்ட ஒரு வாரத் திற் கெல்லாம் செடி வேரூன்றி கிளம்ப ஆரம்பிக்கிறது.

எரு விடுதல்.

புகையிலைப் பயிர் நன்றாய் கிளம்பவேண்டு மாயின் ஒழுங்காக எருவிட வேண்டியது அவசியம். செடியை நன்றாய் வளர்க்கக் கூடிய எருவை மாத்திரம் போட்டால் போதாது. இலைகளையும் மேன்மையானதாகச் செய்யக் கூடியதாகவு மிருக்கவேண்டும். சோடா நைட்டி ரேட் செடியையும் நன்றாய் வளர்ப்பதோடு உயர்ந்த இலையையும் கொடுக்கிற தென்று கண்டுபிடித்திருக்கின்றனர். பொடாஷ் மூரியேட்டை புகையிலைச் செடிக்குப் போடலாமென்று எவரும் கூறுவதில்லை. ஏனெனில் அதில் சேர்ந்துள்ள குலோரைன் இலையின் எரியுந் தன்மையைக் கெடுத்துவிடு கிறது. ஆகையால் அவ்வெருவைப் போடக் கூடாதென்று தடுக்கின்றனர். பொடாஷ் ஸல்பேட் தான் புகையிலைச் செடிக்கு சிறந்த எரு. அதில் சல்பூரிக் ஆஸிட் கலந்திருக் கிறபடியால் அவ்வெரு மிகுதியாக உபயோகிப்பதால் தீமையே விளையும்.

முத்துக்கொட்டை, பிண்ணுக்கு, மீன் எரு முதலி யவை விலை நயமாய்க் கிடைப்பதா யிருந்தால் அவைகளை யும் போடலாம். கரியமலவாய்வு அதிகமாகக் கலந்திருக்கும் எருக்களை அதி நயமாகப் போடுவதால் செடிகளுக்கு பிற் காலத்திலேயே கரியமலவாய்வு அவ்வெருவி லிருந்து கிடைக்கிறது. ஆரம்பத்திலேயே அதற்குக் கிடைக்காமல் போகிறபடியால் இலைகள் வெளுத்து நன்றாய் வளர்ச்சி

யடையாது போய்விடுகின்றன. ஆகையால், சோடா நைட்டிரேட்டே மிகுந்த பலனை யளிக்கக்கூடிய எரு. எலும்பு எரு, பொடாஷ் ஸல்பேட், ஸூபர், பாஸ்பேட் முதலியவை நிலத்தைக் கடைசியாகப் பதனிடும்போது போடவேண்டும். சோடா நைட்டிரேட்டை மேலே போடவேண்டும். ஆனால் தண்டின் பேரிலோ அல்லது இலையின் பேரிலோ படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வெருவை இரண்டு அல்லது மூன்று தர மிடவேண்டும். நட்ட செடிகள் நன்ருய் வேரூன்றிய பிறகும் அதற்குப் பிறகுமே இடுதல் நலம். புகையிலை பயிரிடுவோர் இம்முறையை கவனித்து பயிரிடுவார்களாகில் அவர்கள் அதிக லாபமடைவார்க ளென்பது திண்ணம். (தமிழ்நாடு)

கொழும்பு இந்திய வாலிபர் சங்கத்தின் சார்பில் சுவாமி சகஜானந்தர் 25—5—27-ல் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். ஒரு வாழ்த்துப்பா சங்க ஆசிரியரால் பாடிக் கொடுக்கப்பட்டது.

பல்கேரியாவில் புதிய கவர்ன்மெண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. மிஸ்டர் ஸ்டர்டி, பூராவும் புதியதான ஒரு மந்திரி சபையை அமைத்திருக்கிருர். பிரதம மந்திரி, அன்னிய நாட்டு மந்திரி ஆகிய இரு பதவியையும் அவர் வகிப்பார்.

மேமீ, 31-ந் தேதியோடு முடிந்த ஐந்து மாதங்களில் மலேயாவிலிருந்து 164000 டன் ரப்பர் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1626-ல் இதே காலத்தில் 151000 டன் ஏற்றுமதியாயிற்று. ஆனல் மதிப்பு இப்பொழுது 2430 லக்ஷம் டாலரும், முன்பு 2515 டாலருமாகும்.

ஜேம்ஸ் கார்டன் எனும் மான்செஸ்டர் வியாபாரி விற்பனை செய்யத்தக்க துணிகளுக்குப் பதிலாகக் கந்தைத் துணிகளைப் பம்பாய்க்கு அனுப்பி, 482 பவுன் மோசஞ் செய்ததாக, மான்செஸ்டர் கோர்ட்டில் வந்த வழக்கு ஒன்றில், அவனுக்கு 12 மாதக் கடுங்காவல் விதிக்கப்பட்டதாம்.

நியூயார்க்கில், யாங்கரீவிலுள்ள, பாய்ஸ் தார்ம்சன் தாவா ஆராய்ச்சி சாலையின் அத்தியக்ஷகர் டாக்டர் வில்லியம் கிராக்கர் ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்திருக்கிருர். அவருடைய தாவா இல்லத்தில் செயற்கை முறையில் மின்சார விளக்குகளின் உதவியால் செடிகளுக்கு உஷ்ணம் கொடுத்து வளர்க்கப்பெறுகிறது.

ஐம்புல வேடர் கும்மி.

ஸ்ரீமான் வேலுப்பிள்ளை (நவாலி வடக்கு.)

காப்பு.

காயாபுரிக் கோட்டை யைம்புலவேடுவர்
கள்ளஞ் செய் காதை தமிழ்ப்பாட
ஓயா தடியர்க் கருள்புரி யேரம்ப
ஞோரம் பொற் பாதங்கள் காப்பாமே. (1)

துட்டவ சுரனைக் கூறுக் கியன்பர்
தொல்லை வினைகளை நீ றாக்கி
அட்டகிரி யுறை வள்ளி மணவாள
னாறு முகே சனுங் காப்பாமே. (2)

வெண்டாமரை யிலுறை சுரும்பு விதி
மெய்ம்மறை நாவிற் சுவை கரும்பு
வண்டார் பசுங்கிளி யென்ன கத்தேவளர்
வாணி மலரடி காப்பாமே. (3)

அன்று தொட் டெந்தன் குலப்பகை யாயெனை
யாட்டிய வைம் புல வேடுவர்கள்
பொன்ற வெழுந் தருள் சுப்பிரமண்யனின்
பொற்பத பங்கயங் காப்பாமே. (4)

வேதாக மத்திரு வாய்மலர்ந் தேயிரு
மெய்ஞ் ஞானக் கொம்மை முலை குலுங்க
சூதான வைம் புல வேடர் கதைக் கும்மி
சொல்லி யடியடி ஞானப் பெண்ணே. (5)

நூல்.

சீர்வளர் செந்தா மரையினில் மேவிய
செல்வியை மார்பிற் றரித்த பிரான்
பேர்வளர் நாராயண னுந்திப் பூவினிற்
பெற்ற தோர் நான்முகப் பிள்ளையடி. (6)

நான்முகப் பிள்ளை முன்னாளிற் படைத் திட்ட
நல்ல தோர் காயாபுரிக் கோட்டை
வானனல் நீர் வளி மண்ணென வைந்தன்றி
மற்றொன்றி னுகாமணிக் கோட்டை. (7)

ஸ்ரீமதி லக்ஷ்மி ஏகாம்பரம்.

தூத்துக்குடி முனிசிபாலிடிக்கு முதல் தடவையாக
தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் கௌன்சிலர்.

ஸ்ரீமதி கௌரி தேவி.

(காலஞ்சென்ற உதகமண்டலம் ஸ்ரீமான் வி. ராஜகோபால் நாயுடு காருவின் புத்திரி)

சென்னை சர்வகலாசாலை ஸம்ஸ்கிருத வித்வான் பரீக்ஷையில் முதல் முறையாகப் பட்டம் பெற்ற மாது.

MUTHIAH PRESS, MADRAS.

பிராணாயாமம்

(ஸ்ரீமான் கே. வெங்கடராமய்யர் எழுதியது.)

உடல் உயிர் மனம் இவைகள் வெவ்வேருகக் கருதப் படுகின்றன. இயற்கையில் பிராண சக்தியானது உடலுள் தனித்திருக்கின்ற தென்பதில் சந்தேக மில்லை. ஆனல் பிராண சக்தியின் தோற்றத்திற்கு சாதனமாயுள்ள சத்வ நாடிகள் உடலெங்கும் வியாபித்திருக்கின்றன. அன்றியும் இவைகளுடன், மனதின் வியாபாரத்தை வியக்தப் படுத்துவதான மூளைக்குச் சாதனமாயுள்ள ஸ்நாயுக்களும் நெருக்கி வியாபித்திருக்கின்றன. சத்வ நாடிகளும் மூளையின் ஸ்நாயுக்களும் சூக்ஷமமாய், இலேசாய், தனித்ததாயிருப்பினும், இவைகள் மிகுதியும் அன்னியோன்னிய சம்பந்தம் பெற்றிருப்பதாகவே காணப்படுகின்றன. ஆயினும் ஸ்தூல ரூபமான இவ்விரண்டுள், அதிக மேன்பாடுடையது மூளையின் ஸ்நாயுக்களேயாம். உடலின் போஷிப்பும், சுத்தமும், பாதுகாப்பும் இந்த ஸ்நாயுக்களை அனுசரித்தே மிகுதியும் நிகழும். இரத்தத்தின் நிறைவும், இதன் முழுப்போக்கும், இரத்தத்தைச் சரிப்படுத்தும் அவயவமாகிய இருதயமும், அதாவது உடலின் சர்வபாகமும், ஸ்நாயுக்களைச் சார்ந்திருக்கின்றன. சுத்த இரத்தத்தைப் போதுமானவளவு பாவச் செய்வதும், நீடித்த சுகாதார சௌக்கியத்தை உண்டு பண்ணுவதுவும், உடலனைத்தையும், பாது காப்பதுவும், இந்த ஸ்நாயுக்களாலின்றி முடியாது. ஆதலால் சரீரத்தின் சத்துவ நாடிகளும் மூளையின் ஸ்நாயுக்களும் சூக்ஷமமாயும் தனித்ததாயும் இருந்தபோதிலும், இவைகள் ஒன்ருேடொன்று சார்ந்தே நடைபெறுகின்றன.

பரமாணுக்கள்.

சத்துவ நாடிகளும் மூளையின் ஸ்நாயுக்களும் அசைவுற்றிருந்தால் மாத்திரமே, இவைகளுள் மரித்தும்,மரிக்கும் தருவாயி லிருப்பதுவுமான பரமாணுக்கள் நீக்கப்படுவது சாத்தியமாகும்; உயிருடனிருக்கும் பரமாணுக்கள் போஷிக்கப் படும்; இவைகளின் நிரந்தரமான செயல்களைக் கொண்டே தேக சௌக்கியம் உண்மையில் நிலைபெறுவதாக இருக்கிறது. உணவு, ஆகாயம், முதலிய பலவகைகளினின்றும்

நாம் இப் பரமாணுக்களை உட்கொள்ளுகின்றோம். அவைக ளுள் எங்கும் வியாபித்துள்ள ஆகாயத்தினின்று உட்கொள் ளும் பரமாணுக்கள் மிகுதியும் சுலப சாதகமாக இருக்கின் றன. நமக்கு முதன்மையில் தேவையானது, வேண்டிய அளவு இப்பரமாணுக்களை உட்கொண்டு வருவதுடன் அவை களை செழிப்புற வளரச்செய்வதும் வளம்பெறச் செய்வதுமே யாம். இது சரீரமெங்கும் பரவக்கூடிய அசைவைக் கொண்டு நிகழும். இவ்வசைவை நாடிகளுக்கும் ஸ்நாயுக் களுக்கும் எங்ஙனம் கொடுப்பது என்பது அடுத்த கேள்வி.

இச்சை.

சரீரத்திலுள்ள ஸ்நாயுக்களின் பெரும்பாகம் இச்சை யின் வசமாக இருக்கின்றன, அதாவது மூளையின் சத்துவத் தைச் சார்ந்திருக்கின்றது. சத்துவ நாடியின் அதிகபாகம் மனோவலிமையை அனுசரிக்கிறதென்பது கருத்து. மெலிந்த மனிதன் சிடுசிடுத்தவனாகிறான். அவனுடைய மனதிலும் நடவடிக்கையிலும்கூட தனது அதிகாரத்தை அவன் செலுத்துவதாக இல்லை. ஆனால் இவனது தேகபலம் சரிப் படு மிடத்து இவனது சிடுசிடுப்பும் தணிந்து விடுகிறது. இவன் தனது சத்துவத்தையும் அமைதியையும் சுவாதீனப் படுத்திக் கொள்ளுகிறான். இது அனுபவ சித்தாந்தம்.

எந்த வேலையும் எந்த உத்தியோகமும் எந்த முயற்சி யும், சத்துவநாடிகளும் மூளையின் ஸ்நாயுக்களும், இச்சையை அனுசரித்து நடக்குமளவில் மாத்திரமே, காரிய நிர்வாகம் சாத்தியமாகு மாதலால், சரீர வலுவிற்கு ஆதாரமாக இருக் கும் பரமாணுவின் தேவை அவசியமாகிறது. இதனை வேண் டாதவன் ஒருவனும் உலகிலில்லை. பரமாணுக்களை வளர்ப் பது ஸ்நாயுக்களின் அசைவாலென்று சித்தாந்தப் படுத்தி னோம். இவ்வசைவும் இச்சையைச் சார்ந்து, அதாவது மனோவலுவைச் சார்ந்து, மிகுதியும் நிகழ்கின்றன வென் பதையும் சித்தாந்தப் படுத்தினோம்.

புத்தி பூர்வமான அசைவிற்கு சுலபமான சாதனந்தான் பிராணாயாமம். அதாவது பிராணாயாமத்தை புத்தி பூர்வ மாகச் செய்தல் வேண்டும். இப்படி இல்லையெனின் அது முழுசாதகத்தையும் உண்டுபண்ணாது. இச்சையின் வச மாக இருந்து நடைபெறும் மூளையின் ஸ்நாயுக்களைக்கொண்டு சத்துவ நாடிகளையும், சத்துவநாடிகளின் அசைவைக்கொண்டு

மூளையின் ஸ்நாயுக்களையும் மனோபாவத்தின் உதவியால் உறுதிப்படுத்தி, அவைகளின் தீவிர அசைவால் பிரேதமாய்ப் போன பரமாணுக்களை அப்புறப்படுத்தியும், பாக்கியுள்ள பரமாணுக்களை வளம்பெறச் செய்தும், மற்றும் ஆகாயம் உணவு முதலியவைகளிருந்து பரமாணுக்களை விசேடமாக உட்கொண்டும், இவைகளின் தவருப் பயனுக சரீர சௌக்கியத்தை ஸ்திரப்படுத்துவதே பிராணுயாமத்தின் முதன்மையான மெய்யான மர்மம். இதுவே தேகத்திற்குரிய காரிய நிர்வாகத்தின் இரகசியமாம்.

கசரத்தும் பிராணுயாமமும்.

சரீரத்தை ஆரோக்கியத்தில் வைப்பது சரீரப் பயிற்சி. அதாவது கசரத்து என்பது பொதுவான கொள்கையாயினும், இது, பெரும்பாலும் சிரம சாத்தியமும் மிக துர்லபமானதென்றே நாம் இங்கு ஆக்ஷேபிப்போம். நாகரீகமான இக்காலத்திற்கேற்ப சரீரப்பயிற்சிக்குரிய நாகரீகமான கருவிகளும், எங்கும் பரவியதான கசரத்துசாலைகளும், அவைகளுட்சென்று பயில்வதற்கு சௌகரியமான ஒய்வு நேரங்களின் போதுமான அளவும், காலக்ஷேபத்திற்கே வன்பாடுபடும் நம்மவர்கள் எல்லோருக்கும் பொதுவில் கிடையாது என்பது மறுக்கத் தக்கதன்று. நகரங்களில் வசிக்கும் மாணவர்கள் வியாபாரிகள் பெரும்பாலான உத்தியோகஸ்தர்கள் பரிசுத்தமான காத்து சஞ்சரிக்கும் வெளிப் பிரதேசங்களில், சரீரப் பயிற்சிக்கென்று, தினசரியாக சென்று வருவதற்கான வழிபாடு இல்லாதிருப்பதோடு, தாழ்ந்த பாமர சனங்களாக உழைக்கும் உழைப்பாளிகளைப்போல தேகப் பிரயாசப்படுவது மதிப்புக் குறைவெனக் கருதப்படுவதால் இதுவும் சாத்தியமில்லை. பரிசுத்தமற்ற இடங்களில் பயிலும் தேகப்பயிற்சி நோயைத் தேடித் தருவதேயாகும். அன்றியும் ஆரோக்கியத்திற்குத் தேவையான அளவு கசரத்து செய்வதற்கு வேண்டிய காலத்தின் சிறு பகுதியே பிராணுயாமத்துக்குப் போதும். எடுத்துக் கொள்ளவேண்டிய பரிசிரமும் இதில் மிகவும் குறையும். இது, பாலர் முதல் விருத்தர்வரை எல்லோரும் சாதிக்கத் தக்கது. சரீரவலுவுடன் மனோவலுவும், கேவலம் சிரமமற்ற இச்சைக்கு வசமாகி ஒருங்கே இவைகள் விருத்தி அடைகின்றன. சரீரத்துள் சிரோபாதம்வரை எல்லா இடங்களி

லும் ஒரே விதம் சரியான பயிற்சியைத் தருவதானதல்ல தேகப் பயிற்சி. இது முற்றிலும் உண்மை. கால் கைகள் சதைப் பற்றுள்ளதாயும், மார்பு விசாலமாகவும், கணுக்கள் உறுதியாகவும் மற்றும் இவைகள் போன்ற சாதகங்கள் தேகப் பயிற்சியால் சாத்தியமாகும். பிராணயாமத்தைப் போன்று இது சர்வாங்கத் தேர்ச்சியை உண்டுபண்ணாது.

சரீர பலத்தைக் காட்டிலும், ஆத்மசக்தி விசேடித்த தென்று மகாத்மா காந்தி கூறுவதை இப்போது எல்லோரும் அறிகிறோம். இவருடைய ஆத்மசக்தியும் துறவும் நிகரற்றது. நாமெல்லோரும் இத்திறங்கள் வாய்த்தவர்கள் அல்ல; வாய்த்திரும்பினும், எப்போதும் தவறாது இவைகளைக் கொண்டு செலுத்தக்கூடிய பாக்கியத்தைப் பெற்றவர்கள் அல்ல. இவைகளை அடைய முயல்வது நன்மையேயாயினும் தேக வலிமையும் ஆரோக்கியமும், அவசியமல்லவென்று மகாத்மாகாந்தி ஒருபோதும் மொழியவில்லை. சரீரபலம் அதிகரிக்குமிடத்து ஆத்மபலம் குறையுமென்பதுவும் இல்லை. ஆத்ம சக்தியால் கைப்பற்ற நாம் அசக்தர்களாக இருக்கும்போது, தற்காப்புக்காக சரீரத்தேர்ச்சி முதன்மையில் அனுகூலமானதென்பது இதிகாச சித்தாந்தம். அநியாய வழியில் செல்வது கூடாதே வொழிய, அற்புதமான தேகவலிமையைக் கொண்டிருப்பது தகாததன்று. அசக்தனாக இருப்பது அஹிம்சா தர்மத்தைக் கொண்டாடுவதல்ல. பிராணயாமத்தால் சித்திப்பதான சரீரபலம் மிருகத்தன்மைக்குரிய மூர்க்கத்தனமான திடமல்ல; தெய்வீகத்தன்மை நிறைந்த சாந்தியோடு கூடிய வலிமையாகும். இது விலங்கினத்தின் குணத்தைத்தரமாட்டாது. ஆதலால் பிராணயாமத்தால் ஆத்ம சக்திக்கு யாதொரு கேடும் சம்பவிக்காது. பிராணயாமத்தால் சித்திப்பதானவும் இச்சானுசாரமாய் நிகழ்வதானதுமான இச் சரீரவலிமையும் தேர்ச்சியும் ஆத்ம சக்திக்கு சிறப்பையே கொடுக்கும்.

வயிறு நிரம்ப உண்பதற்கு விதியில்லாது தேகம்குன்றி வருந்தும் தரித்திர சனங்களுக்கும், தாமுண்ணும் உணவு சிறிதளவுகூட வீணாகாது உடலுக்கு ஆதாரமாக நின்று பயன்படுவதால், இப்பிராணயாமம் சகல சனங்களுக்கும் அத்தியாவசியமென இங்கு சுருக்கமாகக்கூறி, இனி இதன்

விதங்கள் தத்துவங்கள், முறைகள், இவைகள் சாஸ்திரீக ரீதியாகவும் வைத்திய ரீதியாகவும் பின்வரும் வியாசங்களில் எடுத்து வரைய உத்தேசித்திருக்கிறேம். பலவித நோய்களின் சிகிச்சைக்கெனவும், நோய்கள் அணுகாதிருப்பதற்கான பாதுகாப்புக்கெனவும், மனப் பயிற்சிக்கெனவும், ஆத்ம சாந்திக்கெனவும் பல சங்கதிகளை யாம் விவரிப்பதாக எண்ணம் கொண்டிருப்பதால் லக்ஷ்மியைப் படிப்பவர்கள் பலர் தத்தம் அனுபவங்களையும் சந்தேகங்களையும் எமக்கு நாகரீக சனங்களின் பத்தி விவகார முறைப்படி எழுதினல், எமது பின்வரும் வியாசங்களை அவர்களின் நோக்கத்திற்கு தக்கவாறு இயன்ற அளவு தெளிவுபடுத்துவோம்.

ஆங்கிலக் கல்வியும் அரசாங்க சேவையும்

(ஸ்ரீமான் எஸ். அருணுசலம் பிள்ளை எழுதியது.)

உத்தியோகம் புருஷ லக்ஷணம் "அரைக் காசுக்கு சேவிப்பினும் அரசாங்க சேவகம் மேல்" என்னும் அறிஞருரையின் உண்மையை ஆங்கில ஆட்சியில் கண்கூடாகக் கண்ட நம்மவர்க்கு உத்தம தொழிலாகிய உழவுத்தொழில் வாணிபம் முதலியன உபயோகமற்றவையாயின. பெரும்பாலும் அரசாங்க சேவையின் அவாவால் அளவற்ற பொருள்களை அள்ளி இறைத்து அயலிடம் சென்று ஆங்கிலம் கற்பாராயினர். இதனல் காலத்தைப் போக்கி கருத்தைப் பாழாக்கி கஷ்டப்படுவதுமன்றி தாய் மொழியாம் தமிழ் மொழி புறக்கணிக்கபட்டு ஆன்மார்த்த நூல்களடியோடழிவதாயின. ஊன் வளர்த்தலொன்றே உயர்வாய்க் கருதி ஆசாரம் நீத்து அனுசாரம் குடிகொண்டது. வாலிபர்தம் கோலமும் வறுமைப் பிணியாளரின் துயரமுமே மிகுந்தன.

அந்தோ! நாட்டில் ஆங்கிலம் கற்றூர் தொகை அதிகரிக்கவே அரச சேவையின் பல துறைகளிலும் அற்ப தொழில்கூட கிடைப்பதரிதாயின. ஆகவே கைப்பொரு

ளும் போக்கி காலத்தை வீணாக்கி செய்தொழிலும் விட்டு திண்டாடுவாராயினர். உத்தியோக ஆசையால் உள்ள பொருளிழந்து ஊர் ஊராய்த்திரிந்து கொடுத்த பொருள் போதுமென்று கும்பிட்டுக் கூத்தாடி குலத்துக் கீனம்செய்ய வும் தலைப்பட்டனர். அடிமைத் தொழிலாசையால் ஆகா யக்கோட்டைகட்டி ஆங்கிலங்கற்று அடுப்பூதும் தொழி லில் அமர்ந்து அல்லல்படவு மாயினர்.

அம்மம்ம! இஃது இம்மட்டோடு நில்லாது நம்முள் துவேஷம், பொறாமை முதலிய பல தீக்குணங்களைக் கொண்டுவந்து விட்டன. மேதையீர்! இனியேனும் விழித்து கற்பனகற்று, காலத்தின் அருமை அறிந்து, உத்தி யோகப் பற்றொழிந்து, உழவுதொழில் மேற்கொண்டு; வாணிபமும் கைத்தொழிலும் வழுவாது பெருக, வாழ் வால் மிகுந்து வறுமைப்பிணி விட்டொழிந்தோடும் வகையே முற்பட பரம்பொருளைப் பிரார்த்திக்கிறேன்.

வள்ளுவர்பற்றி வழங்கும் ஓர் கதை.

(ஸ்ரீமான் எஸ். அருணசலம் பிள்ளை எழுதியது.)

தெய்வநூலாம் திருக்குறளைத் திருவாய் மலர்ந்தருளிய வள்ளுவர் பெருமான் அதனை அரங்கேற்றற் பொருட்டு மதுரைத் தமிழகம் சார்ந்தபொழுது சங்கத்தார் பொறாமை காரணமாக அம்மா பெரும்நூலைக் குற்றங்கூறிக் கடிந்து அஃது மகத்துவம்பொருந்தியதெனின் எங்கள் பலகை இடங்கொடுத்து ஒப்புக் கொள்ளட்டுமென வாது செய்து நின்றனர். வள்ளுவர் அவர் தம் விருப்பின்படியே பொது மறையைப் பொற்றாமரைப் பலகையில் பொருந்த வைத்த னர். தெய்வீகப் பலகையோ பொய்யா மொழியாரின் புலமை உணர்த்த நூலளவாகவே குறுகிற்று. புலவர்கள் பொய்கையுள் விழுந்து புலம்பித் தவித்து மீண்டு கரையேறி கணக்காயரின் பெருமை தோன்ற பாக்கள் பல வியம்பி னர். அஃது திருவள்ளுவ மாலையெனத் திரட்டப்பட்டுத் திகழ்வதை பலரும் பார்க்கக் காணலாம்.

வள்ளுவர்பற்றி வழங்கும் ஒரு கதை

இக்காரணம்பற்றி தென்னாட்டில் வழங்கும் கதை யொன்று பின்வருமாறு :—

வள்ளுவர் முப்பாலை முடித்து சங்கத்தினரை அடை யவே ஆண்டு அவருள் முதாண்மை பெற்று திரிநேத்திர னோடு வாதுற்ற வாக்கு வல்லநற்கீரர் பிரமசரியம் பூண்டவ ராதலின் காமத்துப்பாலில் "பாலொடுதேன் கலந்தற்றே பணிமொழி வாலெயிறுகறியநீர்" எனக் கூறினமைகண்டு நகைத்து கேவலம் பெண் பேதையரின் அதரத்தின்கண் உண்டாம் நீர்ச் சுரப்புக்கு இத்துணை சிறப்பா! நன்று! நன்று! என இழிவுபடப்பேசி வருந்தச் செய்தனர். வள்ளு வர் அதனை நிவர்த்திக்கப் பலவகையில் முயன்றும் பயன் பெறாராய் கீரரை ஓர் பெண்பாவையின் மையலில் மயங்க வைத்தே தனது நூலின் உண்மையை உணர்த்த வேண்டு மெனத் தெளிந்தனர். ஆகலின் அந்நகர் வேசியர் வதியும் வீதியடைந்து, காமன் கணையால் கண்டோர் மயங்கும் கட்டழகமைந்த பொதுமகள் மதன பண்டாரவல்லியின் இல்லத்திற் கேகினர். பெரியார் வரவு கண்ட அப்பெண் பால் அவர்தம் அடிகளில் முடிபட வணங்கி, பெருமானே! தேவரீர் அடியாள் இல்லத்திற் கெழுந்தருள என்ன பாக்கி யம் செய்தேன். ஐயன்மீர்! தங்கள் வருகையின் கார ணம் யாதோ! திருவுளம்பற்றல் வேண்டுமெனப் பணிந்து நின்றனள். அப்போறிஞர் தாம் நற்கீரர்பால் கொண்ட காரியத்தை நவின்று அதனை முட்டின்றி முடிக்கவல்ல திறம் படைத்தவள் நீயேயென உணர்ந்து இவண் வந்தனம் என் றார். அதுகேட்ட நங்கை நாயனாரை நோக்கி "சுவாமி! பேதையேன்! ஒப்பற்ற முதல்வனையே சொற்குற்றம் கண்ட கீரர் பெருமானைக் காண்பதேது! அடைவதேது! இஃது மலடி மகப்பெற்ற கதையாயன்றோ முடியும். அந்தோ! அவர் பிரமசரியம்பூண்ட பெருந்தகையாளரா யிற்றே! தாங்கள் கொண்ட கொள்கையை நான் எவ்வாறு பூர்த்திசெய்ய வல்லேன் எனப் புலம்பித் தவித்தாள். தேவர்பிரான் அவளது இன்னுரை கேட்டு மகிழ்வெய்தி பூவையே! நீ புகன்றனயாவும் அறிவேன்; எனினும் இதற் கோருபாயம் கற்பிக்கிறேன். அதன்படி செய்வையேல் சித்திபெறுவது திண்ணம். பெண்ணே! அம்மறை வல் லோன் காலைக்கடன் கழித்தற்பொருட்டு விடியஜாமப்

போதைக்கே விழித்தெழுந்து வைகையையடைவான். நீ உன் பணிப் பெண்களில் வினயமுள்ள ஒருவளை அந்நேரத்திற்கு முன்பே ஆங்கு அடையச்செய்து வேகவைக்காத மட்குடமொன்றில் நீர் நிரப்பிக் கரையில்வைத்து கீரரின் வருகை நோக்கித் துணிமணிகளைத் துவைத்து நிற்கச் செய்தல் வேண்டும். அத்தமிழ் வல்லோன் வந்ததும், அவனை அண்மி ஐய! பாரமாகிய இம்மட்குடத்தை தூக்கிட வேண்டுமெனெ வேண்டின், ஜீவகாருண்யமே குடிகொண்ட அப்பெரியோன் அப்பணி செய்யப் பின்னடையான். ஆனால் குடமோ தூக்கியதும் உடைவது திண்ணம். அவ்வளவில் உன் பாங்கி பொல்லாங்கைப் புலவர்மேல் சுமத்தி மடி பிடித்திழுத்து உன் பால் வந்து உள்ளதை உள்ளபடி உரைத்தேக வேண்டுமென வாது செயவளேல், அவர் ஈண்டு உன் இல்லத்தை அடைவது நிச்சயம். பின்னர் அவனை உன் காமவலையுள் சிக்கவைத்து கருத்தை முடிப்பது கடினமாகாதென அத்தையலாள் செப்பியவண்ணம் சீக்கிரம் செய்து முடிப்பதாய் வாக்களித்தனள்.

பின்னர் அப் பனிமொழியாள் பாவலருக் குரைத்த உறுதி மொழிப்படி தன் பணிப்பெண் பலருள் ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து சூழ்ச்சிகள் பலவும் சொல்லி விடுத்தனள். அம்மாது தன் எஜமானியின் கட்டளைப்படி கலங்காது ஜாமப் போதைக்கே நதியடைந்து குடத்தை நீர் நிரப்பி வைத்து வாக்காளரின் வருகை பார்த்து நின்றனள்.

எண்ணியவண்ணம் கீரரும் காலந் தாளாது நதிக்கரை அடைந்தனர். அது கண்ட பணிப்பெண் சுவாமி! ஏழை மீது இரக்கம் கொண்டு இந்நீர்க் குடத்தை சிரமீது எடுத்திட வேண்டுமென கீரரும் குடத்தண்டை வந்து குனிந்து தூக்கினர். அஃது இரு பிளவாய் இடிந்து வீழ்தலுமே ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றனர். கள்ளியோ! கண்ணீருகுத்து கண்டபடி திட்டி மூதறிஞரை முந்திபிடித்திழுத்தனள். பெரியார் பிழையொன்றும் உணராராய் வேண்டுவது யாதென வினவினர். அப் பெண் பேய் தான் தலைவியின் கோபத்திற் குள்ளாகாமல் கூடவே வந்து குடம் உடைந்த மாயத்தைக் கூறுவிடில் விடேனென்றாள். சங்கத்தார் தலைவரும் மானத்திற்கஞ்சி மற்றொன்றும் பேசாமல் சேயிழையோடே செய்தி உரைத்திடச் சென்றனர்.

வள்ளுவர்பற்றி வழங்கும் ஒரு கதை

பண்டாரவல்லியோ பாவலர் வருவரென்ற நிச்சயத்தால் அழகிய ஆடை அணிகள் பலவும் புனைந்து மூன்று மாடியுள் சப்ரமஞ்சத்தின்மீது சயனித்திருந்தனள். தாதியும் தலைவரை மாடிமீதேற்றி மஞ்சத்தில் துயிலும் மங்கையைக் காட்டி நித்திரை கலையும்வரை நிற்றல் வேண்டுமெனச் சென்றனள். கலைவல்லானோ! இதேது பிள்ளையார் பிடிக்க குரங்காய்ச் சமைந்ததே எனக் கலங்கித் தவித்து ஐயோ! நாம் இவளில்லத்தினின்றும் பொழுது புலர்ந்து போவோமாயின், கண்டார் நகைப்பரே என நாணி நாமே நாரியையெழுப்பி செய்தி யறிவித்து செல்லுவோமெனத் துணிந்து தூர நின்றபடி துயிலெழத்தக்க வழிகள் பல செய்தனர். அவை யாவும் பயனற்றுப்போகவே இறுதியாய் அவள் அங்கத்தைத் தொட்டே எழுப்பினர். விழித்தாள் வேசி! கண்டாள் கவிஞரை! கொண்டாள் கோபம்! அடா நீயார்! எவ்வாறு என் மாடத்துள்வந்தாய்! சிறிதும் அச்சமின்றி என்னைத் தீண்டக் காரணம் என்ன! உனக்கு இங்கு என்ன வேலை! எனக் கோபக்குறி காட்டிப்பேசினள். பாவலரோ பயத்தால் நடுங்கி பாவையைநோக்கி, ஆரணங்கே! அறியாது செய்த குற்றம் கடிந்துகொண்ட கோபம் தணி. யானோ! சங்கத்தார் தலைவன். நாமதேயம் நற்கீரர் என்றார். கேட்டதும் கணிகை கீரர் தம் பாதம்பற்றிப் பணிந்து பதிதனிலிருத்தி கற்றவர் ஏறே! குற்றம் பொறுப்பீர் என்றாள். கவிஞர்கோன் உற்றதுரைத்து பொழுது புலருமுன் போயிட வேண்டினர். அரிவையோ! தன் அங்கத்தைத் தீண்டிய ஆடவர் தம்மை அணையாது விடுவதில்லை யென்ற கொள்கை கோதுரூவண்ணம், இன்றொரு தினமேனும் இல்லத்திற்றங்கி இன்புற்றே ஏகல் வேண்டுமென சரசசல்லாப மொழி பல பேசித் தடுத்தனள். பிரமச்சரியம் பூண்ட பெரியோன் அருந்தவம் அழிவுறக் கண்டு கலங்கினரெனினும் காரிகை காதலை மீண்டு கடக்கும்வகை கண்டானில்லை. ஆகவே அவள்தன் மையலில் மயங்கி மகிழ்ந்தனர் சில பகல். சங்கத்தவரோ வாரமொன்றாக வாணரைத்தேடி வருந்தினர். நண்பரின் வருத்தம் நற்கீரர் அறிந்தே நயந்தனர் நங்கையை. மங்கையும் மகிழ்வுடன் செங்கைகூப்பி செலவு தந்து, தங்கிய தனக்கு அறிகுறியொன்று அளித்திட வேண்டினள். கீரரும் கேட்டு கீழ்க்கண்ட பாடலை பாவைமேல் பாடி கைச்சாற்றிட்டுக் களிப்புடன் கொடுத்தனர்.

பாட்டு.

வண்டுமொய்த் தனையகூந்தல் மதனபண் டாரவல்லி
கெண்டையோ டொத்தகண்ணாள் கிளிமொழி வாயினூறல்
கண்டுசேர்க் கரையோதேனோ கனியொடு கலந்தபாகோ
அண்டர்மா முனிவர்க்கெல்லா மமுதமென் றளிக்கலாமே.

பின்னர் வள்ளுவர் இப்பாடலைப் பெற்று பாவலரிடம்போய் உண்மை உணர்த்தி உயர்வடைந்ததாய் கற்றோர் சிலர் களறக் கேட்டதை சிற்றறிவு கொண்டு செய்தனமாதலின் குற்றம் பொறுப்பது முற்றறிவுடையார் முதற் கடனாகும்.

நந்தமிழ் நாட்டுச்

செந்தமிழ்க் கும்மி.

(நன்னிலம். பண்டித. பா. பக்கிரி சுவாமி பாடியது.)

இராகம் சுருட்டி — தாளம் ஏகம்.

1. காவிரிப் பாவை வளர் நாடு—பேர்
காமருங் கன்னியர் வாழ் நாடு
பூவிரி சோலைகள் சூழ் நாடு—புனை
பூத லத்தில் சிறந்த நாடு. (காவி)

2. வாவிகள் நிறை வியன் நாடு—கற்ற
வாலறி வாளர் வதி நாடு
கோவில்கள் மிகு குரு நாடு—மூன்று
கொற்றவ ராண்ட வள நாடு (வாவி)

3. நந்தமிழ் வழங்கும் நன் நாடு—தக்க
நாகரீகங் கொண்ட தாய் நாடு
எந்த விதத்திலும் சுய ராஜ்ய—மது
எய்தப்பெறத் தக்க சீர் நாடு (நந்த)

4. பந்த மகற்றும் பதி நாடு—அறு
பத்துமூவர் முத்தி யுற்ற நாடு
செந்தமிழ் வாணர் புகழ் நாடு—நனி
செல்வியர் கற்பில் முதிர் நாடு. (பந்த)

வீரபாலன் விநோதக் கதைகள்

(குடந்தை. ஐ. கிருஷ்ணமூர்த்தி எழுதியது)

அக்பர் பாரதம்

அக்பர் பாதூஷாவிற்கு புதிய புதிய புத்தகங்கள் எழுதுவிப்பதில் பிரியமதிகம். அவர் முஸல்மானுயிருந்த போதிலும் பன்முறை ஹிந்து மஹா பாரதத்தை ஆவலுடன் கேட்டிருக்கிறுர். அதிலிருந்து அவருக்குப் பாண்டவர்களின் புகழ் பாரதத்தி லெழுதப்பட்டிருப்பது போல தம் பெயரும் ஒரு பாரதத்தில் எழுதப்பட வேண்டுமென விரும்பினுர்.

ஆதலின் ஒருநாள் அவர் வீரபாலனை நோக்கி, "நண்பா! பண்டைக் காலத்திய ஒவ்வொரு அரசர்களின் புகழும் பராக்கிரமமும் தனித்தனி புத்தகங்களில் விவரிக்கப் பட்டிருக்கின்றன. அதனுல் அவர்களின் புகழ் இன்றுவரை அழியாம லிருக்கிறது. உதாரணமாக இராமரின் பொருட்டு இராமாயணமும், கிருஷ்ணரின் பொருட்டு பாகவதமும், பாண்டவர்களின் பொருட்டு பாரதமும் ஏற்பட்டிருக்கின்றன. இம்மாதிரியே என் பெயரும் என்று மழியாமலிருப்பதின் பொருட்டு அக்பர் பாரத மென்னும் ஒரு நூலை இயற்றுவிக்க ஆர்வமுள்ளவனுயிருக்கிறேன். ஏனெனில் யானும் பாண்டவர்களைப்போல் புகழ்பெற்றவனுயும் பல தேசங்களுக்கு அதிபதியாகவும் இருக்கிறேன்" என்று செப்பினுர்.

வீரபாலன், "அக்பர் தமது சரித்திரத்தை எழுதச் சொல்லி யிருந்தால் நலமாயிருக்கும். ஆனுல் இவர் தம்மை பாண்டவர்களுக்குச் சமமாய் நினைத்து அக்பர் பாரதமொன்றையன்றோ எழுதச் சொல்லுகின்றுர்! இவர் எண்ணத்தை எப்படியாவது நிறைவேறுமற் செய்கிறேன்' என மனதில் தீர்மானித்துக்கொண்டு, "மகாராஜ்! அக்பர் பாரத மெழுதுவது ஒரு பெரிய காரியமல்ல. ஆனுலும் பாரதத்தில் ஒன்றேகால் லக்ஷம் சுலோகங்கள் இருப்பதுபோல இதனிலும் ஒன்றேகால் லக்ஷம் சுலோகங்கள் எழுத வேண்டும். இதற்கு தாங்கள் ஒன்றேகால் லக்ஷம் ரூபாய் எனக் களிக்க வேண்டும்" என மொழிந்தான்.

இதனைக்கேட்டு களிகொண்ட அக்பர் அவ்வாறே பொருளளித்து ஆறுமாதத் தவணையும் கொடுத்தார். வீர பாலன் அதனைக்கொண்டு குளங்கள் கிணறுகள் முதலியன வெட்டுவித்தும், சத்திரங்கள் முதலியன கட்டுவித்தும், இன்னும் பலவித தானங்கள் செய்வித்தும் அப்பணத்தை செலவழித்து விட்டுப் பேசாமலிருந்துவிட்டான். ஆறு மாதங்கள் கழிந்தன. ஒருநாள் அக்பர் வீரபாலனை நோக்கி புத்தகம் எழுதியாய்விட்டதா வென்று கேட்டார். வீரபாலன் முடியும் தருணத்தி லிருக்கிறதென்று கூறிவிட்டு வீட்டிற்குச் சென்று ஓலைகளை எடுத்து ஒழுங்காய்ச் சீவி ஒன்ருய்க் கோர்த்து மேலும் கீழும் இரு பலகைகளை வைத்து மேற்புறம் ஓர் அழகிய பட்டைப்போட்டுச் சுருட்டி எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தார். அக்பர் புத்தகம் எழுதியாய்விட்டதா வென்ருர். வீரபாலன் ஆய்விட்டது என்று கூறிக்கொண்டே பட்டை அவிழ்க்க ஆரம்பித்து, "மகாராஜ்! புத்தகம் அநேகமாய் முடிந்து விட்டது. இன்னும் ஒரே விஷயம்தான் பாக்கி யிருக்கிறது. அதனை பட்டமகிஷியிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டும். அதற்குத் தாங்கள் அனுமதி யளிக்கவேண்டும் என்று உரைத்தான். அக்பர் "புத்தகத்தை அவிழ்க்க வேண்டிய அவசியமில்லை முதலில் ராணியைப்போய்ப் பார்த்துவா, பின்னர் புத்தகத்தைப் பார்வையிடுகிறேன்" என்று சொன்னுர்.

உடனே வீரபாலன் புத்தகத்தை சுருட்டிக்கொண்டு அந்தப்புரத்தை யடைந்தார். வீரபாலன் இஷ்டப்படி எங்கு வேண்டுமானுலும் போவார். தடை செய்வார் ஒருவருமில்லை, அதனுல் அவன் ராணியிடம் சென்று, "மஹாராணி! தங்கள் புருஷர் இவ் வக்பர் பாரத விஷயமாக நான் தெரிந்துகொள்ளவேண்டிய சில விஷயங்களைத் தங்களை தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிருர். இவ் வக்பர் பாரதமென்னும் நூலை முடிப்பதின் பொருட்டு தங்களிடம் கொண்டு வந்திருக்கிறேன். ஒரு விஷயம் மட்டும் கூறிவிட்டால் புத்தகம் முடிவடைகிறது. தாங்கள் கோபியாம லிருந்தால் கூறுகிறேன்" என்ருன்.

ராணி யவ்வாறே கேட்கும்படி கூறினுள். வீரபாலன்—"பாண்டவர்களைப் பற்றிய பாரதத்தில் திரௌபதிக்கு ஐந்து புருஷர்களிருந்தனர். தங்களுக்கு ஐந்து புருஷர்கள் யார்

யார் என்று கூறிவிடுங்கள். அத்துடன் புத்தகம் முடிந்து விட்டது'' என்று புகன்ருன்.

உடனே ராணிக்குக் கோபம் மேலிட்டது. அவள் வேலைக்காரியை அழைத்து ''இப்புத்தகத்தைக் கொண்டு போய் கொளுத்திவிடு,'' என்று கோபத்துடன் உரைத்தாள். உடனே புத்தகம் சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருவராலும் படிக்கப் படாமலேயே சாம்பலாக உருமாறிற்று.

காரியம் பலித்ததெனத் தெரிந்து கொண்டு வீரபாலன் அக்பரிடம் சென்று அங்கு நடந்த எல்லா விஷயங்களையும் கூறி, ''அரசே! மஹாராணி பதிவிரதையாகையால் என் பேரில் கோபம் கொண்டு புத்தகத்தைக் கொளுத்தி விட்டாள். இனி என் செய்வது ஒன்றேகால் லக்ஷம் ரூபாயும் போய்விட்டது. ஆயினும் தாங்கள் தங்கள் பாரதத்தின் திரௌபதியின் ஐந்து புருஷர்களின் பெயரையு எழுதிக் கொடுத்து மறுபடி ஒன்றேகால் லக்ஷம் ரூபாயும் அளிப்ப தானல் மறுபடி ஒரு பாரத மெழுதித்தருகிறேன்'' என்று அமைதியாய் அறைந்தான். அக்பர் சற்று நேரம் யோசித்து, ''சரி புத்தகம் எழுதுவதில் இவ்வளவு இடையூறுகளிருப்ப தால் அதனில் பிரவேசியாமலிருப்பதே நலம்'' என்று கூறி விட்டார்.

என் பூமியில் காலை வைக்காதே!

ஒரு முறை வீரபாலன் அக்பரை பரிகாசம் செய்து விட்டமையால் அக்பர் கோபம் கொண்டு வீரபாலனை நோக்கி, ''இனி நீ என் பூமியில் காலை வைத்தாயானல் உன் தலையைச் சீவி விடுவேன், போ!'' என்ருர். வீரபாலன் ஒரு நீண்ட சலாம் செய்து விட்டகன்ருன். வீரபாலனின் விரோதிகளுக்கு அதனல் அளவிடா ஆனந்த மேற்பட்டது.

சின்னட்களுக் கெல்லாம் அக்பரின் கோபம் தணிந்த தும் அவர் தான் செய்த காரியத்தை யுன்னி பச்சா தாபப்பட ஆரம்பித்தார். மாதங்கள் சில சென்றன. அக்பருக்கு வீரபாலன் சமீபத்தி லில்லாமலிருப்பது சந்திர னில்லா இரவுபோ லிருந்தது.

ஒருநாள் அக்பர் அரண்மனைவாயிலில் நின்று கொண் டிருக்கும் பொழுது ஒரு வண்டியில் வீரபாலன் போவதைக் கண்டார். வீரபாலனைக் கண்டதால் சந்தோஷ முண்டா

யிற்றேனும் அதனை வெளிக்குக் காட்டாமல் வீரபாலனிடம் போய், "நீ ஏன் என் கட்டளையை மீறினாய்?" என்றார்.

வீரபாலன் வணக்கத்துடன், "வேந்தே! நான் தங்கள் கட்டளையை ஒருபொழுதும் மீறவில்லை. நான் இவ்வண்டியை விட்டு கீழிறங்கவேயில்லை. இதோ பாரும் இவ்வண்டியில் உட்காருமிடத்தில் கொட்டியிருக்கும் மண் சீனாவிலிருந்து வரவழைக்கப்பட்டது. அதனால் நான் தங்கள் பூமியில் ஒருநாளும் கால் வைக்கவில்லை" என்றான்.

இதனைக்கேட்டு வீரபாலனின் புத்தியை வியந்து அக்பர் அவன் குற்றத்தை மன்னித்து முன்போல தன்னிடம் இருத்திக் கொண்டார்.

பண்டிதர்

ஓர் ஊரில் ஒரு பிராமணர் வசித்து வந்தார். அவர் சிறிதும் எழுத்து வாசனை யறியாதவர். அப்படியிருந்தும் தம்மை யெல்லாரும் 'பண்டிதர்' என்று அழைக்க வேண்டுமென்ற விருப்பம் அவருக்கு இருந்தது. ஆனால் கல்வியில்லாதவனுக்கு இவ்விருப்பம் ஈடேறுவது எப்படி? அதனால் அவர் வேறு வழியொன்றும் காணாது அவர் வீரபாலனின் வீட்டை யடைந்து தன் விருப்பத்தை உரைத்து எப்படி யாவது தம்மைப் பலரும் பண்டிதரெனப் பகரும் வண்ணம் செய்யச் சொன்னார். வீரபாலனும் ஒரு பிராமணர் தான். அதனால் அவர் இவர்மீது இரக்கம் கொண்டு அவரை நோக்கி, "சரி இன்று முதல் ஒரு வாரத்தில் ஊர் முழுவதும் உம்மைப் பண்டிதரென அழைக்கச் செய்கிறேன். இப்போது நீர் போய் அந்த நான்கு ரோடுகளும் சந்திக்கு மிடத்தில் போய் நில்லும். எவரேனும் பண்டிதரென்றால் வைதுகொண்டு அடிக்க ஓடும். ஒரு வாரத்திற்குப் பின்னர் என்னை வந்துகாணும்" என்று சொல்லி யனுப்பினர். பிராமணர் அப்படியே போய் நின்று கொண்டார்.

வீரபாலன் அங்குள்ள சில விளையாடிக்கொண் டிருக்கும் பையன்களிடம் போய், "அதோ நிற்கும் அந்த பிராமணன் தம்மை 'பண்டிதர்' என்று எவரேனும் அழைத்தால் அடிக்க வருகிறார்" என்றார். உடனே பையன்களெல்லோரும் அவரிடம் சென்று பண்டிதர்! பண்டிதர்!! என்று சொல்லிக்கொண்டு அவர் அடிக்க வரும்போது

ஓட ஆரம்பித்தனர். அவர் ஒரு தெருவில் பையன்களைத் துரத்திக்கொண்டு ஓடினால் அதற்கு எதிர் தெருவிலுள்ள பையன்கள், பண்டிதர்! பண்டிதர்!! எனக் கூவ ஆரம்பித்தனர். இவ்வாறு நாலைந்து நாட்களில் அவர் பெயர் ஊர் முழுவதும் பண்டிதர் எனப் பரவிவிட்டது. ஒருவாரமான பின்னர் அவர் வீரபாலனிடம் போய் அவர் செய்த தந்திரத்தைக் கண்டு வியந்து பணிந்தார். வீரபாலன் அவரை, "சரி, இனி எவரேனும் பண்டிதர் என்று அழைத்தால் அடிக்க வேண்டாம் போம்" என்று சொல்லி யனுப்பி விட்டார்.

அன்று முதல் அவருக்குப் பண்டிதர் என்ற பெயர் பிரபலமாயிற்று.

கடவுள் செய்யக் கூடாததை நான் செய்யக் கூடும்

ஒருநாள் அக்பர் சபையிலுள்ள ஒவ்வொருவரிடமும் மேற் கூறிய வாக்கியத்தைக் கூறினார். ஒருவராவது மறு மொழி கூறவில்லை. கடவுள் செய்ய முடியாததை நீர் செய்ய முடியும் என்றால் உதாரணம் கேட்டால் என் செய்வது என்ற பயம் ஒரு புறமும் கடவுளால் செய்ய முடியாததை உம்மாலும் செய்ய முடியாது என்றால் அரசருடைய கோபத்திற்குப் பாத்திரனாக வேண்டுமேயென்ற பயம் மற்றோர் புறமும் அவர்களைப் பீடித்தது. அதனால் தான் அனைவரும் பதிலளிக்கவில்லை.

வீரபாலன் வந்ததும் அக்பர் அவனையும் கேட்டார் அதற்கு அவன் "ஆம்" என்றான். உடனே அக்பர் "எப்படி" என்றார்.

அதற்கு வீரபாலன், "கடவுளே எல்லாவற்றையும் சிருஷ்டி செய்கிறார். அவருக்கு யாராவது ஒரு மனிதன் மீது கோப மேற்பட்டால் அவனை தன்னிடமிருந்து தள்ளி விட முடியாது. ஏனெனில் எல்லோரும் அவருடைய சிருஷ்டிகள் தான். ஆனால் தங்களுக்கு விருப்பமில்லாத ஒருவனை தங்கள் ராஜ்யத்தினின்றும் துரத்த முடியும். இது கடவுளால் செய்யமுடியாத காரியம்" என்று உரைத்தான்.

இதைக் கேட்டு அக்பர் மகிழ்ந்தார்.

விகடத் துணுக்குகள்

கணவன் :—“ இது என்ன அனியாயமடி ! எத்தனையோ புடவை யிருக்கும்போது இந்தப் புடவையையும் ஏன் வாங்கினாய் ? நான் பணத்துக்கு என்ன செய்வேன்.”

மனைவி :—“ அது உங்கள் வேலை, நான் உங்கள் பெண் டாட்டியா ? பணம் தேட வழி சொல்லிக் கொடுக் கும் குருவா ?”

தாயார் :—“ நம்முடைய மகன் கலியாணம் செய்துகொள் ளவே மாட்டான். கடுகளவு புத்திகூட இல்லை. முழு மூடம்.”

தந்தை :—“ அப்படியா ? ஆனால் அவன் கலியாணம் செய் வது நிஜம்.”

முருகன் :—“ வேலா ! நான் உனக்கு இரவல் கொடுத்த குடை எங்கே !”

வேலன் :—கோபாலனுக்கு இரவல் கொடுத்திருக்கிறேன்.

முருகன் :—என்ன முட்டாள் தனம் செய்தாய். அவ னுடைய சிநேகிதன் குடை வேண்டுமென்று தொந் தரவு செய்கிறதாக கோவிந்தன் என்னை அரித்துப் பிடுங்குகிறான். நான் என்ன சொல்ல ?

இரவு 11-மணி. பெருமாள் கருடவாகனத்தில் இரண்டு பெரிய வெண் கொற்றக் குடை நிழலில் ஊர்வலம் வரு கிறார். தகப்பனார், பி. ஏ. பரீட்சைக்கு எழுதியிருக்கும் மகனைப் பார்த்து, “குழந்தாய்! பெருமாளைக் கும்பிடு, முதல் வகுப்பில் பரீட்சை தேறும்.”

மகன் :—“ அப்பா ! அற்பனுக்குப் பவிசுவந்தால் அர்த்த ராத்திரி குடை பிடிப்பான் என்பார்கள். இந்தப் பெருமாள் இரண்டு குடை பிடித்திருக்கிறார் அவர் டபிள் அற்பன். இவரையா கும்பிடச் சொல்லுகிறீர்.”

"லக்ஷ்மி" பஞ்சாங்கம்

ப்ரபவ௵ ஆனி௴ ஆடி௴ சாலிவாகன 1849,
கலியுகாதி 5028, பசலி 1336, கோல்லம் 1102, ஹிஜரா 1345,
இங்கிலீஷ் 1927௵ ஜூலை௴

ஜூலை	ஆனி ஆடி	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
1	17	வெ	துதி 12-23	பூச 44-43	மா 60	மழை 5-நாள் வரையிலும்
2	18	சனி	திரி 12-45	ஆயி 47-45	மா 47 அ	சவுத்தி விரதம்
3	19	ஞா	சது 14-45	மக 52-10	மா 52 சி	ஸ்காந்த பஞ்சமி
4	20	திங்	பஞ் 18-15	பூர 58-10	சித் 60	சஷ்டி விரதம் மழை
5	21	செ	சஷ் 22-58	உத் 60-	அ 60	ஆனி திருமஞ்சனம்
6	22	புத	சப் 28-23	உத் 4-45	அ 7 மா	காதுகுத்த மயிர்வாங்க
7	23	வி	அஷ் 34.15	அஸ் 12-57	சித் 60	சுபங்கள் விலக்க
8	24	வெ	நவ 39-45	சித் 19-10	சித் 60	வியாதியஸ்தர் குளிக்க
9	25	சனி	தச 44-35	சுவா 25-48	அ 25 சி	லக்ஷ்மி வ்ரதம் ஆரம்பம்
10	26	ஞா	ஏகா 48-15	விசா 31-20	மா 60	ஏகாதசி விரதம்
11	27	திங்	துவ 50-25	அனு 35-33	சி 60	மழை. சுபமுகூர்த்தம்
12	28	செ	திர 50-48	கேட் 38-8	மா 38 அ	குளம் கிணறு வெட்ட
13	29	புத	சது 49-50	மூல 39-13	மா 49 அ	மழை 3-நாள் வரையில்
14	30	வி	○ பௌ 47-28	பூரா 38-48	சி 60	ஸ்ரீமந்தம் வித்தியாரம்பம் நாமகரணம்
15	31	வெ	பிர 43-45	உத் 37-3	சி 37 மா	ஆஷாட பகுளம் [காலம்
16	1	சனி	துதி 38-40	திரு 34-10	சி 60	தட்சணயண புண்ணிய
17	2	ஞா	திரி 33-8	அவி 30-35	ம 30 சி	கரிநாள் சுபம் விலக்க
18	3	திங்	சது 27-8	சத 26-35	சி 26 ம	சதுர்தசிவிரதம் [தாபிக்க
19	ஆடி 4	செ	பஞ் 20-50	பூர 22-18	ம 22 அ	மந்திரம் ஜபிக்க ஏற்றம்ஸ்
20	5	புத	சஷ் 14-38	உத் 18-5	சி 20 ம	சஷ்டி விரதம் ஸ்ரீமந்தம்
21	6	வி	சப் 8-40	ரேவ 14-8	சி 14 அ	ஸ்ரீமந்தம் வித்தியாரம்பம்
22	7	வெ	அஷ் 3-5 நவ 58-3	அசு 10-35	அ 10 சி	அடுப்பு ஏற்ற மூலிகை எடுக்க
23	8	சனி	நவ 2-தச 53-32	பர 7-30 *	சி 7 அ	கார்த்திகை விரதம்
24	9	ஞா	ஏகா 49-43	* 5-7	சித் 60	ஏகாதசி விரதம் மழை
25	10	திங்	துவ 46-40	ரோ 3-25	அ 60	கரிநாள் துவாதசி
26	11	செ	திர 45-33	மிரு 2-25	சி 2 மா	பிரதோஷம்
27	12	புத	சது 43-10	திரு 2-15	சி 60	நோயாளி மருந்துஉண்ண
28	13	வி	● 42-47	புன 3-5	அ 60	ஆடி அமாவாசை விரதம்
29	14	வெ	பிர 43-33	பூச 5-3	மா 60	மழை 4-நாள் வரையில்
30	15	சனி	துதி 46-8	ஆயி 8-8	ம 8 அ	சந்திரதரிசனம் 4-ம் பிறை
31	16	ஞா	திரி 49-23	மக 12-23	மா 12 சி	ஆடிப்பூரம் [போல்

American Goggles or Sun Glasses

அமரிக்கன் வில்சன் காகல்ஸ் அல்லது கண் குளிர்சிக் கண்ணுடி.



இந்த கண்ணுடி அமரிக்கன் டாக்டர்களால் நன்கு மதிக்கப்பட்டும் பரிசோதிக்கப் பட்டும் நமது இந்தியாவில் விற்பனைக்கு வந்து இந்தியாவில் 1000-கணக்கான ஜெனங்கள் உபயோகித்து வருகிறார்கள். இது கண்ணுக்கு அதிக குளிர்ச்சியை தருவதால் இந்த வெயில் காலத்தில் எல்லா மனிதர்களும் உபயோகிக்கவேண்டியதவசியம்.

முதல்ரகம் வில்சன் காகல்ஸ் குளிர்ச்சி கண்ணுடி கேஸ்உள்பட	2	8
இரண்டாம் ரகம் ஷை கண்ணுடி கேஸ் உள்பட ...	2	0
ஷை ஜெர்மன் காகல்ஸ் கண்ணுடி கேஸ் உள்பட ...	1	8
நாலு பில்லை குளிர்ச்சி கண்ணுடி நிக்கல் பிரேம் உள்பட ...	3	0
அமரிக்கன் ரப்பர் பெல்டு ஸ்பிரிங் கிளிப் உள்ளது ...	1	0

விலாசம் :—வி. ஆர். எம். ஆளவந்தார் & கோ.

நெ. 28, பெருமாள்கோவில் தோட்ட தெருவு,

சவுகார்பேட்டை, மதராஸ்.

காமபந்து

பிரபஞ்ச சுகத்திற்கு திவ்விய ஔஷதம்!

2-மணி நேரத்தில் அபூர்வ குணம்!!

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீர்யம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை கெட்டிப்படுத்தி 2-மணி நேரத்திற்கும் அதிகமான சம்சார சுகத்தைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்யநஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவறாமல் கட்டுப்படுத்தும். இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் துரப்பியாசத்தினாலுண்டாகும் நபும்ஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒரு முறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரியவரும். கடிதங்களை ரகஸியமாய் வைக்கப்படும். 20 மாத்திரை கொண்ட சீசா 1-க்கு ரூ. 1.

வி. பி. தபால் சார்ஜ் வேறு.

ஸோல் மான்யூ பாக்ட்சரர் :—

பூஷண வைத்தியசாலை,

நெ. 212, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

மருந்துவாழ் மலையின் மகாத்மியம்.

"அமிர்த சஞ்சீவி"

இது இந்தியாவின் தெற்கே அற்றமான கன்னியாகுமரிக்குச் சமீபித்திருக்கும் மருந்துவாழ் மலையிலிருந்து அநேக மூலிகைகளும் பச்சிலை வகைகளும் உயர்ந்ததும் விலை கூடின சாதனங்களைக் கொண்டு மலையாள வைத்திய நிபுணரால் முறை தவருதபடி தயார் செய்யப்பெற்றது. இதை உபயோகித்த ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே எவ்வளவு பலஹீனனு யிருந்தாலும் நூதன யௌவனத்தையும் உற்சாகத்தையும் அடையும்படி செய்யும். சகல வியாதிகளையும் தீர்த்து ரத்தவிருத்தி, ஜீரணசக்தி, தாதுபுஷ்டி முதலியவைகளை உண்டுபண்ணும். பாலகன் முதல் விருத்தாள்வரை ஆண் பெண் இருபாலார்களும் உபயோகிக்கலாம்.

20 நாள் மருந்து ரூ **3**. 40 நாள் மருந்து ரூ **5**.

தபாற் செலவு வேறு.

M. R. Vaidiasala M. RAMASWAMI Co-,
Kottar, S. Travancore.

மஹா மதனமணி மாத்திரை

தீர்க்ககாலங்களால் துஷ்டரோகங்கள் பிடிபட்டு இரதெந்திரியங்கள் கெட்டு பஞ்சேந்திரியங்கள் வாடி திரேகம் மெலிந்து தசவாயுக்கன் பிரகிருதி விரூபிகளாய் அக்னியும் நஷ்டமாகி, யாதொன்றும் ஜலபானம் கூட இறங்காமல் சாவே மேலென்று தவித்திருக்கின்ற ஜனங்களுக்கும் அக்னியை நன்ருய் வர்த்திப்பித்து பசிதீபனத்தைத் தந்து, இரத்த இந்திரியங்களை நன்ருய் வரச்செய்து, புனர்ஜீவிகளாய் ஸகல போகானு பவங்களையும் அனுபவித்து புருஷாயுசை நிலைநிறுத்துகிறதற்கு மஹா மதனமணி மாத்திரை தேவாம்ருதத்திற்கு ஒப்பானது.

50-மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 5—0—0
32-மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 3—0—0

பெரிய காட்லாக்கு இனும்.

ஆயுர்வேத டாக்டர்,
P. K. M. PADMANABHA DASER,
நெ. 39, ஆதியப்ப நாய்க்கன் தெருவு,
ஜியார்ஜ் டவுன், சென்னைப்பட்டணம்.

குழந்தைகளை : : : : நேசியுங்கள்!

அழுகிறகுழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப் படுத்த நமது “விளையாட்டு சாமான்கள்” செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்ற வடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை.

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 ,, ,, விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் :: :: காசி

சரோஜனி

இது ஓர் அழகிய துப்பறியும் நாவல். இனிமையான தமிழ் நடை. இதன் ஆசிரியர் நாவல் எழுதுவதில் பெயர் பெற்று வரும் ஸ்ரீமான் எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள். 5, 6 அழகிய சித்திரப்படங்களுடன் கூடியது. படிக்க மனோ உற்சாகமாக இருக்கும். சுமார் 390 பக்கங்களுடையது.

இதன் விலை ரு. 2 0 0.

ஜீவவசிய பரம ரஹஸ்யம்

மானிடவசிய ரஹஸ்யத்துடனும் பல அற்புதானந்த ரகஸ்யத்துடனும் கூடியது

இது விழிப்பு நிலையில் மானிடரை வசியப்படுத்தும் வசிய நூல். எல்லாம் வசியம்! எல்லாம் மோஹனம்!! எல்லாம் விழிப்பு நிலையில்!!! 30 அரிய வசிய இரஹசியப் பாடங்களும் 22 அருமையான யோகிகளின் மாய மந்திர யோக வைத்திய முறைகளும், வேறு பல மர்ம ரஹஸ்யங்களும் மல்கிக் கிடக்கும்.

இதன் விலை ரு. 3 0 0.

லக்ஷ்மி புஸ்தக சாலை.

தபால் பெட்டி 99 :: :: சென்னை.

விநோதினி

சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை. சமத்துவம் சகோரத்வம் துவஜ மாகக்கொண்டது.

பெண்கள், வாலிபர், குழந்தைகள், கைத்தொழில், செல்வ நிலை முன்னேற்றத்திற்கும், சாரணர் இயக்கத்திற்கும் திடங் கொண்டது.

வருட சந்தா ரூபாய் 2—0—0 தனிப்பிரதி விலை அணா 3.

விநோதினி ஆபீஸ்

வேப்பேரி, சென்னை.

இனாம்! இனாம்!!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt.
தங்க நிப்பு போட்ட Self-filling
பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப் பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல் லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும்.

கெடியாரம் விலை ரூ. **4-12-0**.

5 வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும் சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே இக்கயிற்றின் (Wire) உதவியால் இதை எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் அணையாது. விசேஷ காலங்களில் இதை வைத்தால் அதிசயத்தைப் பார்ப்பதற்கு ஜனங்கள் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்து அனுப்பப்படும்.

பாட்டரியுடன் லைட் விலை ரூ. **4-8-0**.

தபால் செலவு **0-8-0**.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15, A பீட், ஜி. டி. மதராஸ்.

நல்ல சமயம்! வாங்கத் தவறாதீர்கள்!!

பாரீஸ் லேடிகளின் அழகிய போட்டோ படங்கள்.

இதில் பாரீஸ் லேடிகளின் அழகும் விநோதமும் காணலாம். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத கண் காக்ஷியாகும். படுக்கை யறையில் ஜோடிக்க வெகு சுந்தரமாயிருக்கும். உண்மையான பாரீஸ் படங்கள் நம்மிடந்தான் உண்டு.

பல ரகமுள்ள 1 டஜன் செட்டுக்கு ரூ. **3-0-0**.

பாரீஸ் எம்போரியம்,
ஜி. டி. மதராஸ்.

பச்சை மோதிரத்தின் மர்மம்

இதில் கதா நாயகனான சுந்தரமூர்த்தியை இயற்கையாகவே பண ஆசையில் மேம்பட்ட மார்வாடிகளில் பெயர் பெற்ற மார்வாரிமணிசங்கர் அவன் உயிருக்கே ஆபத்து வரும்படியாக, ஒரு நோட்டில் கையெழுத்திட்டு வாங்கி ரூ. 30000 கொடுக்கிறான். மூன்று வருடங் கழித்து வட்டி ரூ. 20000-ம் சேர்த்து ரூ. 50000-க்கு மார்வாடி சுந்தரமூர்த்தியை தொந்திரவு செய்கிறான். பாலாமணி என்ற 20 வயதுள்ள ஒரு பெரிய பணக்கார விதவை சுந்தரமூர்த்தியைக் காதலிக்க அவன் இணங்காமையால், பாலாமணி தன் கையில் சில பிடிகளை வைத்துக்கொண்டு சுந்தரமூர்த்தியை மணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் மார்வாடியிடம் ரூ. 100000 (ஒரு லக்ஷம்) கொடுத்து சுந்தரமூர்த்தி கையெழுத்திட்ட நோட்டைப் பெறுகிறாள். எவ்வளவோ தன்னுடைய ஆசை வார்த்தைகளாலும் நடிகைகளாலும் சுந்தரமூர்த்தியை வற்புறுத்தியும், அவன் இணங்காமையால் அவனை கெடுக்க பல சூழ்ச்சிகள் செய்வது படிக்க மிக ஆனந்தமா யிருக்கும். ஒரு சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட பச்சை மோதிரத்தின் மர்மத்தால் இரு பெண்கள் கொலை செய்யப்படுவதும், பாலாமணியின் சூழ்ச்சியால் சுந்தரமூர்த்தியின் காதலி கனகசுந்தரிக்கு தன் காதலனைக் கொலை செய்ய வேண்டுமென்ற உத்தரவு கிடைப்பதும், அச்சமயத்தில் அவள் படும் அவஸ்தையும் சுந்தரமூர்த்தியின் கையில் எதுவாக அகப்பட்ட சில பத்திரங்களால் பாலாமணிக்கு கொலை உத்தரவு அரசாங்கத்தாரால் ஆனதும், பலகஷ்டங்களில் அவஸ்தைப்பட்டு தேறி கடைசியாக காதலர்கள், கனகசுந்தரி, சுந்தரமூர்த்தி ஆகிய இருவர்களுக்கும் நடக்கும் கலியாணமும் படிக்கப்படிக்க மிக இனிமையா யிருக்கும்.

இதன் விலை ரூபாய் 1—0—0

லக்ஷ்மி புஸ்தகசாலை,

தபால் பெட்டி 99 :: :: சென்னை.

PERFUME SPRAY.

பன்னீர்

தெளிக்கும் கருவி.

சாதாரணமான எந்த வித பாட்டில்களிலும் வைத்து உபயோகிக்கலாம்.

விலை ரூ. **2—8—0.**

K. S. முத்தையா
கம்பெனி,
ஹைரோடு, திருநெல்வேலி.

A.

S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷெ சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 டஜன் 1-க்கு ரூ. 2 ஷெ சேர் 1-க்கு ரூ. 1-8.

போன் வேள்ளி மேடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,
106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதறாஸ்

21050.

அமெரிக்கன்

ஸில்க் அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு, தினசரி, ...வைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு ...வை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முள நீளம் 40" அகலம்.

விலை ரூ. ***6—8—0*** தான்

கிடைக்கவில்லையே! என்று வருந்தவேண்டாம்.

கனவே 45 நாட்களில் 2000 பட்டுக்களுக்கு மேல் செல ...யும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள், டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை, நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள்!

சிறந்த வாசனை ஊதுவத்திகள்!

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள்! சேர் ஒன்றுக்கு 24 ரூ எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி	சேர்	1-க்கு	6—0—0
அம்பர் வத்தி	,,	1-க்கு	5—0—0
கிலீட் வத்தி	,,	1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி	,,	1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

புடவையிலும் : :

: : ஓர் புதுமை !

MUTHIAH'S

"NEW MODEL SILK SARI"

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது 1½-இஞ்சி ஜரிகைவேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும், பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளூ, முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பார்வைக்குப் பளபளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக்கூடியதாயு மிருக்கும்.

Extra No 1	16மு × 44" புடவை	1-க்கு 80/—
No 1	ஷை	1-க்கு 60/—
No 2	ஷை	1-க்கு 45/—

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

Printed by P. R. Rama Iyar & Co., Madras and Published by K. S. Sundarar.